Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

நமது இயக்க அச்சு வேலைகள் அனைத்துக்கும் சிறந்த இடம் ★ தமிழன் பிரஸ், ஈரோடு.

# குடி அரசு

நமது இயக்கப் புத்தகங்கள் அனைத்தும் கிடைக்குமிடம் ★ நாதன் கம்பெனி ஈரோடு.

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 3-4-1948 சனிக்கிழமை மலர் 30.

# ஆரியத்துக்கு எச்சரிக்கை!

★

(நாட்டில் எங்கும் சுதந்திர வாஞ்சையை என்ற மெட்டு)

"பென்னாகரம் வி. எஸ். நடேசன்"

(1) நால்வகைச் சாதிப்பிரிவை இந்நாட்டினில்
நாட்டினாய் நஞ்சை ஊட்டினாய்—அது
நாளுக்குநாளாக நாலாயிரமாகத் தழைத்தது—
துன்பம் இழைத்தது.

(2) கல்லையும் அறுகெனும் புல்லையும்
தெய்வமாய்க் காட்டினாய் பொருள்
ஈட்டினாய்—இன்று
கண்டுகொண்டோம் உங்கள் சூழ்ச்சியை
என்பதால் காய்வதேன்—சீறிப் பாய்வதேன்?

(3) உழைத்திடும் நாங்கள் உணவின்றிப்பசியினால்
சாவதா மனம் நோவதா—நீங்கள்
உண்டுடுத்தி உப்பி உல்லாசமாய் ஏப்பம்
விடுவதா—நாங்கள் கெடுவதா?

(4) எல்லோரும் ஓர்குலம் என்று சொல்லும் இந்து
மித்திரா பிர்ம்ம புத்திரா—நாங்கள்
எத்தனை காலம்தான் இன்னல்படுவோம்
இந்நாட்டிலே—சொல்லுன் ஏட்டிலே?

(5) வெள்ளையர்கள் செய்த தொல்லைகளை
யெல்லாம் விளக்கினாய் சங்கை முழக்கினாய்—
பொல்லா
வேதியர்க்கூட்டத்தின் சூதினையே சொல்ல
வெட்கமா—இல்லை: துக்கமா?

(6) ஆப்பிரிக்க வெள்ளையர் நிறத்திமிர்க்குச்
சாட்டை கொடுத்திட்டாய் பிச்சு
எடுத்திட்டாய்—ஏனோ
அக்ரகாரத்திமிர் ஆணவத்தைச் சொல்ல
அஞ்சுறாய் பல்லால் கெஞ்சுறாய்!

(7) வடநாட்டுக்காரர்கள் வந்தெங்களைக்
கொள்ளை அடிக்கவும் நாங்கள் துடிக்கவும்—
உங்கள்
வர்க்கத்தார் நன்றாக வாழ்வதற்காய் நாங்கள்
வதைவதா—வாழ்வு சிதைவதா?

(8) வகுப்புத்துவேஷத்தை அடக்கவே
ணுமென்றே வாதித்தாய் மதி போதித்தாய்—
ஆனால்
வகுப்புத்துவேஷம் வளர்ந்திட யாரிங்குக்
காரணம் பதில் கூறணும்!

(9) ஆட்சியின் துணைகொண்டு அடக்கிடலா
மென்று எண்ணுறாய் சதிபண்ணுறாய்—
சற்றும்
ஆகாது இச்செயல் ஆபத்தையேதரும்
அறிந்துகொள்—உண்மை புரிந்துகொள்

(10) வெண்தாடி வேந்தர் பெரியாரின் கொள்கையை
வீழ்த்தவும் எமைத்தாழ்த்தவும்—இன்று
வீண்கனவுதன்னைக் காணநினைப்பதை
விட்டிடு—கடையைக் கட்டிடு!

பெண்கள் பகுதி:

# சமூகத் தொண்டின் முதல் வேலை?

"கொளும்பு தோழியர் சிவணம்மாள்"

★

மேல் நாடுகளில் பெண்களே தங்கள் உரிமைப் போராட்டத்தை நடத்தும் ஆற்றல் உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஆண்களை எதற்கும் எதிர்பார்ப்பதில்லை. அதற்குக் காரணம் அவர்கள்தம் கல்வி அறிவேதான். ஒரு நாடோ, சமூகமோ முன்னேற்றமடைய வேண்டுமானால் கல்வியே முக்கிய அவசியம். நமது நாட்டில் நாம் ஒரு சில பெண்மணிகளே படித்திருக்கிறோம். நம்மவர்களிலும் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே, சமூகத்தொண்டு புரிய முன் வருகிறார்கள். மற்றைய நாகரீகப் பெண்கள் என்பவர்கள் தங்களை அலங்கரிப்பதே தங்களின் முழு நேர வேலையாகக் கொள்ளுகிறார்கள். இந்த நிலை மாறி அடிமைத் தளையை அறுத்தெறிய வேண்டுமானால், ஒவ்வொரு பெண்மணியும் முன்வர வேண்டும். நாம் செய்யவேண்டிய செயல்கள் எத்தனையோ உண்டு. இன்று பெண்ணினம் ஆண்களின் அலங்காரப் பொம்மைகள் என்றே நம்நாட்டில் கருதப்படுகிறது. மேடை ஏறிப் பேசும் சில சீர்திருத்த சிகாமணிகள்கூட, அவர்கள் வீட்டுப் பெண்களை அடிமையிலேதான் வைத்து இருக்கிறார்கள். இதற்குக் காரணம் பாழாய்ப்போன புராண இதிகாசங்களேயாகும். பெண்ணினத்தை அடிமைப்படுத்தும் இந்துமதச் சட்டத்தைத் தகர்த்தெறிய வேண்டும். கற்பு என்பது மாதர்க்குரியது என்பதை மாற்றியமைக்க வேண்டும். இன்னும் கூறவேண்டுமானால் எத்தனையோ உண்டு. என்னைப் பொறுத்த அளவில் நமது அரும்பெரும் தலைவர் ஈ. வெ. ரா. அவர்களின் உழைப்பின் பலனால், நாம் இன்று இந்நிலைமையிலும் விழிப்புற்றுள்ளோம் எனச் சந்தோஷம் அடைகிறேன். நம்இனத்திற்காகப் பாடுபட்ட, தந்தை பெரியாரின் மனைவி நாகம்மையார் நம்மை விட்டுப் பிரிந்ததே நமக்கு ஒரு துரதிர்ஸ்டமாகும். அம்மாள் அவர்கள் மறைவுக்குப் பின் அத்தகைய தியாக உணர்ச்சியும், தொண்டும் புரிய இன்னும் நன்கு படித்த பெண்கள்கூட முன்வராததே, நம் நிலைமை பிடித்து வைத்த பிள்ளையார் நிலைமையிலேயே இருப்பதன் காரணம் ஆகும்.

ஆகவே தோழியர்களே! என் போன்ற வறுமைச் சிகாமணிகள் சமூக சேவை செய்வது என்பதே பெரிதும் அருமையானது. காரணம், மதக்கட்டுப்பாட்டில் கட்டுண்டு அல்லற்படும் எமக்கு உணர்ச்சி பொங்குகிறது; எழுச்சி தூண்டுகிறது. ஆனால் வறுமை விலங்கை அகற்ற இயற்கை இடம் தர மறுக்கிறது. ஆனால், வாராவாரம் உள்ள "குடி அரசை" நீங்கள் பூர்த்தி செய்வதைப் பெரும் மகிழ்ச்சியோடு பார்க்கின்றேன். உங்களுக்கு எனது நன்றியும் வணக்கமும். ஆனால் இம்மட்டோடு இல்லாமல், பெண் இனப்போர் துவக்க ஆயத்தமாகுங்கள்! மதம், ஜாதிக்கொடுமை, புராணம், கோவில் சடங்கு, சாஸ்திரம் ஆகிய விலங்குகளை அகற்றிச் சமூக சேவையையும், பொதுவுடைமைத் தத்துவத்தையும் விளக்கிப் பெண் இனத்தை ஒன்று சேர்த்து, நமது குறைகளை அரசியலாருக்கு அம்பலப்படுத்துங்கள். அதுவே சமூகத் தொண்டின் முதல் வேலையாகும்!

வாழ்க! பெரியார்.

---

23—4—48ம் நாள் பௌரணமியில் கைலாஸ் ஹில்ஸ் ஹெர்ப் (ரிஜிஸ்ட்) ஒரு டோஸ் உட்கொண்டால் 5-வகையான ஆஸ்த்துமாவும் சுகமாகும்.
ஆங்கிலம் அல்லது இந்தியில் எழுதுக:
BRAHMACHARI G. DAS
Sri Sidh Brahmacharya
Sewa Ashram,
P. C. Chitrakot, U. P.

# அறிவுடைமை எது?

★

"சவரி"

(1) கதிர் காம வருஷ விழா சுமார் பதினைந்து தினங்களுக்குக் கொண்டாடப்படுகிறது. தினம் ஒன்றுக்குக் குறைந்தது சுமார் ஆயிரம் ரூபாய் பெறுமதியான சூடம் கொளுத்தப்படுகிறது.

(2) கொழும்பு, செட்டித்தெரு பிள்ளையார் கோவிலில் தினசரி, குறைந்தது சுமார் பத்து செம்பு, சுத்தப்பசும்பாலை, கடவுளெனக் கொண்டாடப்படும் கல்லுப்பிள்ளையார் தலை மீது ஊற்றப்படுகிறது.

(3) அதே மாதிரி, சுத்தமான எண்ணெயும் ஊற்றப்படுகிறது.

மனிதராய்ப் பிறந்து விட்டோம்; மானத்துடன் வாழவேண்டும் என்ற காரணத்தால், துளை மிகுந்த கந்தலுடை உடுத்தும் கோடானுகோடி மக்கள் குவலயத்தில் வாழ்வதை நாம் கண்ணாரக் காண்கிறோம். ஒருச்சாண் வயிற்றுக்கு ஓலமிடும் மக்களை நாம், உலகமெங்கும் கண்ணாரக் காண்கிறோம். கதிர் காமத்தில், பதினைந்து நாள் விழாவில் சூடத்தால் மட்டும் செலவிடப்படும் ரூ. 15000க்கு (இத்தொகை ஆகக் குறைவான தொகை) வேஷ்டி ஒன்று ரூபாய் இரண்டு வீதம் எடுத்து, 7500 பேருக்கு விநியோகம் செய்வது, அல்லது பசியால் வாடும் பாமர மக்களுக்குப் பசிப் பிணியைப் போக்கிடுவது, இம்மாதிரியான நற்காரியங்கள் செய்வது அறிவுடைமையாகுமா? அல்லது ஆகும் நன்மை அணுவளவுகூடத் தனக்கில்லையென நன்றாகத் தெரிந்துங்கூட, அய்ந்து நிமஷத்தில் அக்கினியால் சூடங்களை அழிக்கச்செய்து ஆயிரக்கணக்கான ரூபாய்களை அநியாயம் செய்வது அறிவுடைமையாகுமா?

பச்சிளங் குழந்தையைப் பரிதவிக்க விட்டு விட்டு, இயற்கையை எய்தி விட்ட தாய்மார்கள் எத்தனை பேர்? அக்குழந்தைகளுக்குப் பால் வாங்கிக் கொடுக்கப் பணமில்லாப் பிதாக்கள் பாரிலே எத்தனை பேர்? அம்மாதிரிக் குழந்தைகளுக்குப் பால் விநியோகம் செய்வது அறிவுடைமையா? அல்லது, கடவுளெனச் சொல்லும், கல்லுப் பிள்ளையார் மீது செம்பு செம்பாக, குடம் குடமாக, பசும்பாலை ஊற்றிப் பக்கத்தில், சாக்கடையாக்கி, அதில் பூச்சி புழுக்களை உண்டாக்கி, நோயை வரவழைத்துக்கொள்வது அறிவுடைமையா?

பக்கத்து வீட்டுக்காரன் எண்ணெய் தேய்த்துக் குளித்து எத்துணை நாளோ? காரணம் கையில் காசில்லாததே. கடவுளெனச் சொல்லும் கல்லுப் பிள்ளையார் தலையிலே, வாளி வாளியாக எண்ணெய்யை ஊற்றுவது அறிவுடைமையா? அல்லது, அரைக்

ரோஜா முத்தையா

# சமயப்படிப்பால், ஒழுக்கமோ குணமோ உண்டானதா?

"கைவல்யம்"

★

வாலிபர்களே! சமயம் கிடைக்கும் போதெல்லாம் கிடைத்த புஸ்தகங்களை யெல்லாம் படிக்கவேண்டும்; அறிவைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும்; என்கிற எண்ணத்தை மறக்கக் கூடாது! அறிவுதான் உலகத்தை ஆளும் என்று மகாத்மாகாந்தி நம்பெரியாரிடம் சொன்னதாகப் பெரியார் நமக்குச் சமீபத்தில் சொன்னார். அதை நாமெல்லாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்! ஒருவர் சொல்லுவதை முழுதும் கவனத்துடன் கேட்கவேண்டும்! கேட்டபின் பதில் சொல்லவேண்டும்! சொல்லும் பதில் விஷயத்திற்குப் பொருந்தவேண்டும்! இதில் நம் பெரியார் மேம்பட்டவராயிருந்ததாலே தென்னாட்டில் புத்தியில், யூகத்தில், தர்க்கத்தில் உயர்ந்தவர்களெனப்பட்டவர்கள் மதித்தார்கள். உங்களில் பலரைக் குறித்து நன்றாகப் பேசுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். கிழவயதும் காதுச்செவிடும் பெற்ற என்னால் அதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. நமது பெரியார் இன்னும் சிறிது நாளில் செத்துப் போவார். அதற்குள் அவருடைய பேச்சின்தோரணையைத் தெரிந்து கொள்ளுங்கள்! இந்த வியாசத்திலும் பள்ளியின் சமயப் படிப்பை ஆலோசிப்போம்.

வாலிபர்களே! மனிதவர்க்கத்தின் பிரகாசத்தை நாடும் உங்கள் சாதியக் கொள்கை அவமான மடைய எதுவில்லை. என்றாலும் செல்வமடைந்த ஜாதிகள், புரோகிதக்கூட்டம், அதிகாரம் பெற்ற ஆட்சிக்குழு ஒவ்வொன்றும் பிறருக்குத் தீங்கு செய்யும் ஸ்வார்த்தச் செயல்களினாலேதான், லாபம் அடைந்திருக்கிறது. அதனால் தன்னலம் அவர்களுக்கு அவசியமாகிறது. அப்பொழுது அதுவே தரும்ம் என்ற பாடத்தை, சனத்தின் உள்ளத்தில் அழுந்தச்செய்கிறார்கள். அதைச் செல்வத்தின் திறத்தாலும், சமயத்தின் கதையாலும், தெய்வத்தின் பெயராலும் செய்கிறார்கள். அவைகள் நமக்கு விபத்தைக் கொண்டு வருகின்றன. அதைப் பொறுக்கவேண்டும், சகிக்கவேண்டும், அதை மிதித்து மேலேறவேண்டும். அதற்காக உணர்ச்சி கொள்ளுங்கள்! நீங்களெல்லாம் ஒன்று சேர்ந்து, உங்கள் கண்களும் கைகளும் ஒன்று கூடினால், உடனே இருதயம் ஒன்று கூடச் சமயம் வாய்த்து விடும்! உணர்ச்சிகளும், எண்ணங்களும் அறிந்தோ அறியாமலோ கலந்து கூடிவிடும்! நீங்களெல்லாம் ஒரேவித உணர்ச்சி பெற்றவர்களாகவும், சம எண்ணங்களுடையவர்களாகவும், ஒரேவித சக்தி வாய்ந்தவர்களாகவும், ஆகிவிடுவீர்கள்!

அதற்காக நமக்குள்ளே சில்லரைச் சண்டை, அற்பப்பகை, அற்பப்பொறாமை, நம்மை நாமே பெரியவனென்று நினைத்துக் கொள்வது கூடாது! தன் சுகத்தையும், லாபத்தையும் விட்டவன்தான் பிறருக்கு லாபம் செய்ய முடியும்! பிறருக்குச் செய்யும் நன்மையே, தனக்கு நன்மையாக வந்து சேர்வது! எல்லா நல்லகுணமும் ஒருவரிடம் எதிர் பார்க்க முடியாது! நட்பில் பகைப்பதும், குற்றம் காண்பதும் சுலபம்! நட்பில் பொறுப்பது மேல்! கெட்டவைகளை எல்லாம் விட்டுவிடவேண்டும்! நமக்கு நன்மை பயக்காதவைகளை எந்த அபிமானத்தாலும் கைக்கொள்ளலாகாது! எனக்குக் கால்பந்தாட்டத்தைப் பார்ப்பதில் அதிக ஆசை. பல பந்தயங்களைப் பார்த்திருக்கிறேன். கோலுக்கு எடுத்து வரும் பந்தையும், கோல் ஆகும் பந்தையும், தன்னைத் தொடர்ந்து வரும் தன்னாளிடம் கொடுக்காமல், தானே கோல் அடிக்கவேண்டுமென்கிற எண்ணத்தாலும், கணக்குத் தப்பாலும், பந்தைத் தன் ஆளிடம் கொடுக்காததினால், எதிரி பந்தை எடுத்துக் கொண்டு போய் விடுவான். யார் கோல் அடித்தாலும் அடித்த கட்சிக்குத் தானே கோல் ஒன்று, இந்தஎண்ணம் எல்லோருக்கும் எல்லாக்கட்சியிலும் வரவேண்டும்!

இந்து என்கிற பெயர் அன்னியரால் கொடுக்கப்பட்டது. அதை நாம் வைத்துக் கொண்டோம் என்பதைப் படித்தவர்களெல்லாம் சொல்லுகிறார்கள். சரித்திரமும் அப்படியே தான் சொல்லுகிறது. சுவாமி விவேகாநந்தரும் இந்துமதமென்று சொல்லுவதை விட வைதீக மதமென்று சொல்லுவது மேல் என்றார். மகாத்மா காந்தியும் அப்படியே சொன்னார். இந்துமதமென்கிற பெயரை மாற்றுவதில் பிராமணர்களுக்குச் சம்மதமிருக்காது. ஏனெனில் வைதீக மதமென்றாலோ, பிராமண மதமென்றாலோ, அதில் குறுகிய மனப்பான்மை வந்து விடும்; குறுகிவிடும். இந்து மதமென்பது எல்லோர் மனதிலும் பதிந்து விட்டது. எல்லாச் சாதிக்காரர்களையும் அழுத்திக்கொண்டிருக்க வழியும் ஆகிவிட்டது. வைதீக மதத்தை இப்பொழுதும் பிராமணர்களுக்கு மட்டுந்தானே வைத்துக்கொண்டிருக்கிறோம். அதையே, இந்து மதமென்றுதானே எல்லோரையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியும்.

பல பிரிவுகளையுடையது இந்து மதம். ஒவ்வொரு பிரிவிற்கும் சாஸ்திரம், கொள்கை, தத்துவம், மோட்சம், நரகம் வெவ்வேறு மாதிரியாகவிருக்கும். எப்படியிருந்தாலும், எல்லாம் வைதீக வேதத்தை ஆதாரமாகக் கொண்டவைகள். எல்லா மதத்தின் ஆச்சாரியும், குருவும் பிராமணன் தான். பற்பல நாட்டிலும் பார்ப்பார் இல்லை என்று கபிலர் சொன்னபடி, எந்த நாட்டிலும் பிராமணன் இல்லை. நமது நாட்டில் மட்டும் பிராமண ஜாதி என்று ஒரு ஜாதியுண்டாகி மதங்களை உண்டாக்குவதும், அதையேதொழிலாகக்கொண்டு ஜீவிப்பதும், அதற்காகப் பல பிரிவுகளை உண்டாக்குவதும் என்கிற நிலைமையில் இப்படியே பல காலம் நடந்து வந்ததினால் தெய்வம் பெருகி, தெய்வத்தின் பெயர்களும் பெருகி, ஒழுங்கான ஒரு இந்து மதமுமில்லாமல், சனங்களுக்கு ஒன்றும் பிடிபடாமல் மௌடீகர்களானார்கள். பிராமணனின் தொழிலும், சுகமும் சரியாக நடந்ததேயல்லாமல், சமயத்தால் சனசமூகத்திற்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை; ஒன்று சேரவில்லை. நமது சனங்களோ உண்ண உடுத்த எல்லா சனங்களுக்கும் முன் தெரிந்தவர்கள். பழைய தேசம். அப்படியிருந்தும் இவ்வளவு காலமாக ஒற்றுமையும் சமரசமும் காணப்படவில்லை. ஆசாரி, குருவென்று சொல்லப்பட்டவர்களெல்லாம், தன்னலம் பொருந்திய உரிமைகளைக் காப்பதில் கருத்தைச் செலுத்தித் தமது குழந்தைகளுக்குச் சமமான தாழ்ந்த வகுப்பாரிடம் இரக்

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

---

காசும் இல்லாத அடுத்தவீட்டு ஏழை மகனுக்கு, எண்ணெய்யைத் தானம் செய்வது அறிவுடைமையா?

அன்பர்களே! சூடத்தாலோ, பாலாலோ, எண்ணெயாலோ, மேற்படி கடவுள் கடுகளவேனும் பிரயோசனப் படுகிறாரா? இல்லை. ஆகையால், அறிவுக்குச் சிறிது சிந்தனையை அளியுங்கள்! தான் செய்வது சரியா? பிசகா? என்பதை அறிவைக் கேளுங்கள்! அறிவு பதில் சொல்லும்! அதன் படி நடங்கள்! பழம் பழக்க மாச்சே, வாழையடி வாழையாக வாழ்ந்து வந்த வழக்கமாச்சே என்று அறிவுக்குப் பொருந்தாத, அறிவுக்கு விரோதமான ஆபாச நடத்தைகளுக்கு அடிபணிய வேண்டாம்! அடிபணியக் கூடாது!! அடிபணியக் கூடவே கூடாது!!!

# தீர்ப்புக் கூறுங்கள்!

"புத்த தாசன்"

★

மதமென்ற மதுவுண்டு அறியாமையில் மூழ்கிச் செயலற்றுக்கிடக்கும் திராவிட மக்களின், சிந்தனையின் பொன்னொளியைத் தூண்டிவிட்டு, அடிமை நிலையிலிருந்து விடுபடச் செய்து, சாந்தமும் சமாதானமும் அன்பும்—இன்பமும் நிலவுவதாகவும், பகுத்தறிவிற்கு ஒத்ததாகவும் உள்ள, புதியதோர் பொதுவுடைமைச் சமுதாயத்தை அமைக்கவேண்டும் என மக்கள் மன்றத்தில் கூறி அதற்காகப் பாடுபட்டு வருவது தான் திராவிடர் கழகம்.

இன்றையத் திராவிட மக்களின் வாழ்வு இருள் சூழ்ந்ததாகவும், அடிமைத் தனமும்—அறியாமையும், இழிவுகளும் நிறைந்ததாகவும் இருக்கிறது. இதுபோன்ற சூழ்நிலையில் வாழ்வது வெட்கமும் துக்கமும் நிறைந்ததாக இருக்கிறது என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டவேண்டி, கருப்புச்சட்டை அணிந்து கொண்டு, மேற்கண்டபடியான அறியாமையும், அடிமைத்தனமும் நிறைந்த சூழ்நிலைக்கு நாம் அழைத்துச் செல்லப்பட்ட வரலாறுகளையும், அதனின்று நாம் விடுபடவேண்டிய அவசியத்தையும், அதற்கான வழிவகைகளையும் மக்களிடம் கூறிவரும் திராவிடர் கழகத்தாராகிய நம்மைக் கருஞ்சட்டைப் படை என்றும், பொதுமக்கள் சமாதானத்திற்கு ஆபத்து விளைவிக்கும் ஸ்தாபனம் என்பதாகவும் கூறித் தடை விதித்திருக்கிறார்கள் ஆளவந்த அமைச்சர்கள். பட்டவர்த்தனமாகக் கூறவேண்டுமானால் இது விழிப்புற்று வீறுகொண்ட இனத்தின் உரிமைப் போராட்டத்திற்கும், பகுத்தறிவிற்கும், சிந்தனா சக்திக்கும் இடும் தடைதான்! இதுபோன்ற கொடுங்கோல் ஆட்சிக்கு மக்களையே தீர்ப்புக் கூறும்படி விட்டு விடுகிறோம்.

நாட்டு மக்களிடம் நடமாடும் பேதா பேதங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும், அறிவற்ற செயல்களையும் போக்கி, நாம் எல்லோரும் ஒரு கலை, நாகரீகம் மொழி, பண்பு கொண்ட சமுதாயம் (திராவிடர்கள்) என்ற உண்மைநிலையை எடுத்துக்கூறி ஒற்றுமையும், உயர்வும் பெறும்படி செய்வது தான் வகுப்புத் துவேஷமா? சமாதானத்திற்குப் பங்கம் விளைவிப்பதா?

ஆண்ட பாரம்பரையில் பிறந்த நாம் அரசு இழந்து, ஆரியத்திற்கு அடிமைப்பட்டுக் கீழ் மக்களாகச் சமுதாயத்தின் அடித்தளத்தில் நசுக்குண்டு, பொருளாதாரத்தில் பஞ்சையர்களாக வாழும் இன்றைய நிலையைப் போக்கி, மீண்டும் இழந்த இன்பத்தையும், அரசையும் பெற்றுத் திராவிட மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும் எனக் கூறுகிறோமே, இதுதான் பொது மக்கள் சமாதானத்திற்கு ஆபத்து விளைவிப்பதா?

பாடுபடும் பாட்டாளிகளும், பண்ணை முதலாளிகளிடம் பரிதவிக்கும் விவசாயிகளும், ஆலை முதலாளிகளிடம் அவதிப்படும் எனது அருமைச் சகோதரத் தொழிலாளர்களும் வறண்ட வாழ்வில் துவண்டு கிடக்கிறார்கள். அவர்கள் வாழ்நாளில் ஏழ்மை, இல்லாமையைத் தவிர, வேறெதுவும் கண்டதில்லை. பிச்சைக்காரர்களைப்போல் பிறந்த நாட்டில் வாழ்கிறார்கள். அதே சமயம், இந்த நாட்டிற்கு அண்டிப் பிழைக்க வந்த ஆரியக் கூட்டம் அறியாமையையும், அனாச்சாரத்தையும், மூடநம்பிக்கையையும் மக்களிடம் பரப்பி, அதையே கை முதலாகக் கொண்டு சுரண்டிச் சுகபோகத்தில் சொக்கிக் கிடக்கிறார்கள். இந்த நயவஞ்சக நரிக் கூட்டத்தின் இழி செயலையும், சூழ்ச்சிகளையும் மக்களுக்கு எடுத்துக்கூறி அதனின்று மக்களே விடுபடச் செய்து எல்லோரும் உழைத்து இன்புற வாழவேண்டும் எனக் கூறுகிறோமே, இதுதான் சமாதானத்திற்கு ஆபத்து விளைவிப்பதா?

தற்பொழுது திராவிடர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்து மதமும், அதன் கோட்பாடுகளும் திராவிட மக்களின் நல்வாழ்விற்கு வழிகாட்டுவதாகவும், பகுத்தறிவிற்கு உகந்ததாகவும் இல்லை. நாம் இந்த மதத்தினால் அடைந்திருக்கும் சூத்திரப் பட்டமும், அதனால் நாம் அனுபவித்துவரும் கஷ்ட நஷ்டங்களும் நீங்க வேண்டும். எங்களைக் கீழ் மக்களாக்கியிருக்கும் இந்த மதமும், அந்த மதத்தவர்கள் என்று கூறிக்கொண்டு ஆட்சி செய்பவர்கள் ஆட்சியிலும் நாங்கள் இருக்க விரும்பவில்லை. எங்கள் திராவிட நாட்டை எங்களுக்குத் தனியாகப் பிரித்து விட்டுவிடுங்கள் என்று கூறுகிறோமே, இதுதான் சமாதானத்திற்கு ஆபத்து விளைவிப்பதா? ராஜத் துரோகமா?

நாம் மக்களிடம் கூறிவரும் முற்போக்குக் கொள்கைகள் எங்கெங்கும் பரவிப் புதியதோர் சமுதாய அமைப்பு! ஏற்படுமானால், நாம் மக்களை ஏய்த்துச் சுரண்டிப் பிழைக்கும் வாழ்விற்குச் சாவு மணி அடிக்கப்பட்டுவிடும் என்பதை உணர்ந்த ஆரியம், ஆளவந்த அமைச்சர்களைத் தன் அடிமையாக்கிக் கொண்டு நம்மீது தடை விதிக்கும்படிசெய்திருக்கிறது. ஆட்சிப்பீடத்தில் இருக்கும் திராவிட அமைச்சர்களும் எதை எப்படிச் செய்தாலும், ஆரியத்தின் ஆதரவு இருக்கும்வரை நம்மை யாரும் அசைக்க முடியாது என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

தடை விதிப்பதினால் இன உணர்ச்சியையும், சிந்தனா சக்தியையும் அடக்கி விடலாம் என்றுதான் ஆளவந்த அமைச்சர்களும், சுரண்டிப் பிழைக்கும் சுகபோகிகளும் கருதுகிறார்கள். இங்குமட்டுமல்ல! உலகத்தில் பலவேறுபட்ட பகுதிகளிலும். ஆனால் முடிவில் அவர்கள் கண்டது தோல்வி என்பதை உலகச் சரித்திரம் உணர்த்துகிறது.

"தடை" திராவிடர் கழகத்தின் போக்கில் எந்த விதமான மாறு

[தொடர்ச்சி 12ம் பக்கம்]

## நம்விரல்களே நம்கண்ணைக் குத்துவதா?

# மாணவர்கள் எங்களின் மாபெரும் சொத்து.

## அடக்கம், பொறுமை அவர்களின் அணிகலன்.

[ 21—2—48ம் நாள் திருச்சியில் நடந்த திராவிட மாணவர்கள் மாநாட்டில், பெரியாரவர்கள் ஆற்றிய பேருரையில், மாணவர்கள் எவ்வாறு நடந்து கொள்வது அவர்களுக்கும் இயக்கத்திற்கும் மாண்பைத்தரும் என்ற முறையில் விளக்கிய சிறு பகுதி இது. ]

மாணவர் கழகத்தின் சார்பாக அழைக்கப்படும் யாரும் மாணவர்களைப் புகழாமல் செல்வதில்லை என்பது உங்களுக்குத் தெரியும். மாணவர்கள் நிலை நிரந்தரமானதல்ல; என்றுமே ஒன்றுபோல் இருப்பதில்லை, நேற்று குழந்தைகளாயிருந்தவர்கள் தான் இன்று பள்ளிகளிலும் கல்லூரிகளும் மாணவர்களாய் படித்து வருகிறீர்கள். நாளை நீங்கள்தான் பெரியவர்களாய் வாழ்க்கை நடத்தப் போகிறீர்கள். இந்த நிலையற்ற பருவத்தில் எது நல்ல காரியம் என்று உங்களால் சிந்தித்துச் சுலபத்தில் அறிந்து கொள்ள முடியாது. மாணவர்கள் தாமாகவே ஒருநல்ல காரியத்தை ஆராய்ந்தறிந்து அதைச் செய்து முடிக்கக் கூடிய சக்திபடைத்தவர்கள் என்று என்னால் நினைக்க முடியவில்லை. அவர்களைக்கொண்டு பல நல்ல நல்ல காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம் என்றுதான் நான் அபிப்பிராயப் படுகிறேன். ஆகவே அவர்கள் தம்மைத் தம்முடைய திரண்ட சக்தியை நல்ல தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். இப்படிக் கூறுவதற்காக மாணவர்கள் என்மீது கோபித்துக் கொள்ளக்கூடாது. மாணவர்கள் தலைவர் இட்ட கட்டளைப்படி நடக்கக் கூடியவர்கள். சொல்லிக் கொடுப்பதைப் படிக்கக் கூடியவர்கள். ஆதலால் தமக்கு எல்லாம் தெரிந்து விட்டதாக அவர்கள் ஒரு போதும் நினைத்துக் கொள்ளக்கூடாது. அப்படி நினைப்பவர்களிடமிருந்து தான் காலித்தனம் கட்டுப்பாட்டுக்கு அடங்காத தன்னிச்சைத்தனம் விரைவில் புறப்படுகிறது. ஆகவே அவர்கள் மிக ஜாக்கிரதையாக விஷயங்களைச் சிந்திக்க வேண்டும். தம்மால் கூடுமான அளவுக்கு நல்ல தலைவர்களை அவர்கள் தேடித் திரிதல் வேண்டும். எந்த அளவுக்கு தாம் அன்பு செலுத்துகிறார்களோ அந்த அளவுக்கேனும் தம் மீது அன்பு செலுத்தக் கூடிய, தம்மை நல்வழிப் படுத்துவதில் ஆசையும் அக்கரையும் உள்ள தக்க பெரியார்களைத் தேடிப் பிடிக்கவேண்டும் அவர்கள். அந்த வழியில் நாங்கள் முயற்சிசெய்து அவர்களில் ஒரு சிலரையாவது எங்களையும் எங்கள் கொள்கைகளையும் நம்பச்செய்து, அப்படிப் பெற்ற சிலரை நாங்கள் எங்களுக்குச் சொந்தமான பெருஞ்சொத்தாக மதித்து நாங்கள் மகிழ்ந்து வருகிறோம்.

### மாணவர்களின் உண்மையான தகுதி.

மாணவர்கள் நல்ல ஸோல்ஜர்கள்; நல்ல ஜெனரல்களல்ல. மாணவர்கள் நல்ல சிப்பாய்கள், நல்ல கமான்டர்களல்ல. ஆகவே நல்ல சிப்பாய்களைப் போல் அவர்கள் பல கட்டு திட்டங்களுக்குட்பட்டு நடக்கவேண்டும்.

### தொண்டின் முன்பு சோதனை.

மாணவர்கள் பொது நலத்தொண்டில் ஈடுபட நினைக்கும்போது, முதலில் பொதுநலத் தொண்டில் ஈடுபடத் தமக்குத் தகுதியிருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளவேண்டும். தங்கள் நலன்களை விட்டுக்கொடுக்க, அவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்க அவர்கள் தயாராக இருக்க வேண்டும். தங்கள் உயர்வைக் கருதாமல், தங்கள் பட்டத்தைப் பெரிதாகக் கருதாமல், தங்களைச்சாதாரணச் சராசரி மனிதனாகக் கருதிக் கொள்ள அவர்கள் முதலில் சம்மதிக்க முடியுமா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். தங்கள் வாழ்க்கையையும், அவர்கள் கூடுமான அளவுக்குச் சராசரி மனிதனுடைய வாழ்க்கைக்கு உட்பட்டதாக ஆக்கிக் கொள்ளவேண்டும்.

### தற்காத்தல்.

ஒரு பக்குவமடைந்த பெண்ணை எப்படி எந்த வெளியே சென்றால் கெட்டுப்போகுமே என்று தாய்தந்தையர் கவலையோடு காப்பாற்றி வருகிறார்களோ, அதேபோல் மாணவர்கள் தங்கள் புத்தியை, தங்கள் சக்தியைக் கண்ட இடத்திலெல்லாம் செலுத்தாமல் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

### தன்னலம் பேணாமை.

நீங்கள் உங்களைச் சாதாரண மனிதர்களாக நினைத்துக் கொள்ளவேண்டும். உங்கள் வாழ்க்கைச் சௌகரியங்களையும் எவ்வளவு குறைத்துக் கொள்ளமுடியுமோ அவ்வளவுகுறைத்துக் கொள்ளவேண்டும். உங்களுக்கு மிக மிக அடக்கம் வேண்டும். நீங்கள் மிக மிக தன்னலமற்றவர்களாயிருக்க வேண்டும். இப்படிப்பட்ட மாணவர்களால் தான் ஏதாவது உருப்படியான நன்மை ஏற்படும். மாணவர்கள் தம்மைனர் வாழ்க்கைத் தன்மையை அறவே விட்டொழிக்க வேண்டும். மைனர் வாழ்க்கை நடத்தக் கூடியவர்களை இயக்கத்தில் சேர்த்துக்கொண்டால், அவர்கள் தம் சொந்த வாழ்விற்காக இயக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தம் சொந்த வாழ்விற்குத் தடை ஏற்படும்போது பேசாமல் வெளியேறிவிடுவார்கள். அல்லது எதிர்ப்புவேலை செய்வார்கள். அல்லது எதிரிகள் கையாளாக ஆகிவிடுவார்கள். அப்படிப்பட்ட நொண்டி மாடுகள் நுழைய வொட்டாமல் மாணவர் இயக்கத்தைக் காப்பாற்ற வேண்டும்.

### தொண்டிற்குத் தகுதியற்றோர்.

பொதுத் தொண்டுக்கு வந்த உடனே தங்களைப் பெரிய மேதாவியாக நினைத்துக்கொள்ளக் கூடியவர்களும், தங்கள் தகுதிக்கு மேலாக போக போக்கியம், பெருமை, தங்களுக்குக் கிடைக்கவேண்டிய விகிதாச்சாரத்திற்கு மேலாக மதிப்பு, தங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று நினைப்பவர்களும், எந்த இயக்கத்திலும் இருக்கத் தகுதியற்றவர்கள் ஆவார்கள். அப்படிப்பட்டவர்களால் பொதுவாழ்க்கையில் எப்போதும் எந்தக் கொள்கையிலும் நிலைத்திருக்க முடியாது.

### அபாயகரமான நோய்.

பொதுநலத் தொண்டர் எவருக்கும் உள்ளத்தில் அடக்கம் வேண்டும். தான் என்ற அகம்பாவம் கூடாது.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

**தடைமேல் தடை! தளரவில்லை நாம்!**

# ★ பழனிப் பயணம். ★

"முத்து—மணி"

★

பல ஆண்டுகளாகப் பார்த்துவருகின்றோம் பங்குனி உத்திரத்தை. இந்த உத்திரத்திலும் பழனி பொதுவாக அறிவு கெட்ட சிறப்புடன் காணப்படும். ஏராளமான மக்கள், எண்ணற்ற ஆண், பெண், குழந்தைகள், கணக்கற்ற பொருள்கள் குவிந்து கிடக்கும் அங்கு.

அணுக்குண்டுக்காலத்தைக்கேள்வியுற்ற இக்காலத்திலும், நாகரீகமடையாத மக்களைக் கண்டு வெட்கம் தான் அடையவேண்டியுள்ளது. உயிர் கொடுத்த உயர்ந்த இறைவனுக்கு மயிர் தருகிறேன் என வேண்டிக் கொள்வதும், பால் காவடி பல வைக்கிறேன், தங்கம், செம்பு, பித்தளை, மண்ணாங்கட்டி முதலியவைகளில் பொம்மை செய்து வைக்கின்றேன் என வேண்டுவதும், பிள்ளை இல்லாக் கவலையை ஒழித்தால் எல்லை இலாப் பொருள் செலவு செய்கின்றேன் என வேண்டும் சக்தியற்ற பெண்களும், நம்மைப் படைத்த இறைவனிடம், கேவலமான பிச்சை கொடுக்கின்றேன் என வேண்டிக் கொள்வதையும் இங்கு நாம் காணுகிறோம்.

விமானம் கண்டு பிடித்தேன், அணுக்குண்டு கண்டு பிடித்தேன், ரேடியோ கண்டு பிடித்தேன், பறக்கும் மோட்டார் கண்டுபிடித்தேன், சமையல் செய்ய மின்சாரத்தின் மூலம் உதவி செய்தேன் என ஆண்டவனுக்கு அன்பு காட்டும் வகையில் செய்து காட்டுகின்றான், நாதியற்ற இந்த நாட்டைத்தவிர மேல் நாட்டில் புகைவண்டி நிலக்கரியின் உதவியால் ஓடுகிறது, ஆகாயவிமானம் பெட்ரோல் உதவியால் பறக்கிறது, பூமி சூரியனைச் சுற்றுகிறது, இவை மேல் நாட்டாரின் போற்றக் கூடிய கண்டு பிடிப்புகள். இவற்றால் விளைந்த பயன்களோ ஏராளம்.

சிவனுக்கு வாகனம் காளைமாடு, முருகனுக்கு வாகனம் மயில், அவர்கள் அஷ்டமத்துச் சனியன் நம்மைப் பிடித்து ஆட்டுகிறது. இவை நம் கண்டுபிடிப்பு. மேல் நாட்டுப் பெண்கள் ஆகாய விமானத்தின் மேல் இருந்து கீழ் இறங்குகின்றனர். நம் மக்கள் பழனி போன்ற மலையிலிருந்து இறங்குகின்றனர். மேல் நாட்டு மக்கள் செவ்வாய் மண்டலத்தைக் கண்டு பிடிக்கின்றனர். நம் மக்கள் செவ்வாய்க்கிழமையை விரதநாளாகக்கண்டு பிடிக்கின்றனர். தீர்த்தக் குழி, பிள்ளைவரம் தரும் கடவுள் இவைகள் புதிது புதிதாக எங்கெங்கே உள்ளன என்று பார்ப்பார்கள் நம்நாட்டு அறிஞர்களென்பவர்கள். மக்கள் ஆர்வம்காட்டக் காட்ட மேல் நாட்டான் புதுப்புதுமைகளைக் கண்டு பிடித்துக் காட்டுகின்றான். இங்கு, காவடி தூக்கிச் சாமிஆடும் ஒருவனுக்கு கூட்டம் பெருகினால் ஆட்டம் அதிகம். குதிப்பான், அதுவும் பெண்களைக் கண்டு விட்டாலோ உண்மையில் ஆட்டம் ஆடுவான். ஆண்டவன் சொரூபம் காட்டுவான். வாக்குச் சொல்ல வாய் வந்து விடும். கொட்டு முழக்கத்தை நிறுத்து! கொண்டா துண்ணூறு தட்டத்தை! என்பான். அள்ளுவான் கொஞ்சம், பின்கூட்டத்தில் கொஞ்சம் ஆரம்பித்து விடுவான். "அடியே உன்னை ரொம்ப நாளா எனக்குத் தெரியும்! உன் கவலையும் எனக்குத் தெரியும்! தீர்த்து விடுகின்றேன்! கவலைவேண்டாம்! மலை ஏறுகின்றேன்! என்னைச் சந்தித்து விட்டு வரவேண்டும்! என்று அடிப்பான் தலையில், கொட்டுவான் துண்ணூறுத் தட்டத்தை! அது மட்டுமா? நெத்தியிலும் கொட்டு ஆசையைத் தீர்த்துக் கொள்வான்! இது கோயில் செல்லும் பக்தனின் அடாத செயல்கள்! வெய்யிலோ கால் பாதத்தை எரித்து விடும்போல் இருக்கும்! தண்ணீர்க் குடத்தைப் பார்ப்பான் பக்தன்! உட்கார்ந்து விடுவான்! ஊற்றவேண்டும் தலையில் தண்ணீரை! எழுந்து ஓடுவான்! வருவான்! மலைக்கு. அரகரா, அரகரோ என்பான்! அடிப்பான் மொட்டை! பார்ப்பார்கள் ஆரியர்கள்! அவனிடம் உள்ளதைப் பிடுங்கிக் கொண்டு அடிப்பார்கள் விபூதிப் பட்டை!

இவ்வளவையும் பார்த்த அறிவு கெட்ட நம்மக்கள், அக்ராகாரத்து ஆரியரும் மொட்டை அடிக்க வில்லையே? ஏனென்று எண்ணினார்களா? காவடிகள் தூக்கவில்லையே ஆரியர்கள் ஏன் எனத்தெரியுமா? அறிவு இருக்கிறதா? ஆராய்ந்து தீர்ப்புக் கூறி நடவுங்கள் நல் வழியில்! அதுவே மனித அழகு!

---

**எதற்கு ஆக முதலாளி இருக்க வேண்டும் என்று கேட்பது சமதர்மமாம்!**

---

# ★ திராவிட மாணவர் கோடை விடுமுறைப் பிரச்சாரம்.

இவ்வாண்டு மாணவர் பயிற்சி வகுப்பு எப்ரல் மாத மூன்றாம் வாரத்தில் வழக்கம் போல் நடைபெறும்.

பயிற்சி பெறவும் பிரசாரத்திற்குச் செல்லவும் விரும்பும் மாணவர்கள் கீழ்க்கண்ட விவரங்களுடன் இன்னும் ஒரு வாரத்திற்குள் விண்ணப்பித்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

1. பெயர்.
2. தகப்பனார் பெயரும் முகவரியும்.
3. தற்பொழுது பயிலும் கல்லூரி அல்லது பள்ளியும் வகுப்பும்.
4. பழைய மாணவராயின் தற்பொழுது செய்யும் வேலை.
5. பிரச்சாரம் செய்வதில் தங்களுக்குள்ள தகுதி, அனுபவம்.
6. சென்ற ஆண்டுகளில் மாணவர் பிரசாரக் குழுவில் சென்றவராயின் சென்ற பகுதிகள்.
7. பயிற்சி வகுப்புக்கு வரக்கூடிய தேதி.
8. பிரச்சாரத்தில் எவ்வளவு நாள் கலந்து கொள்ளக்கூடும்?
9. தற்போதைய முகவரி.
10. ஓய்வு பெற்றதும் தங்கும் முகவரி.

குறிப்பு:— இவ்விண்ணப்பத்தோடு பயிற்சி பெறவும், பிரச்சாரத்திற்கு அனுப்பவும் தகுதியானவர் என்பதற்குத் தங்களூர் அல்லது அருகிலுள்ள திராவிடர் கழக நிர்வாகஸ்தர் ஒருவரிடமிருந்து அறிமுகச் சீட்டு வாங்கி அனுப்பவேண்டுகிறேன்.

ஆ. திராவிடமணி,<br>
செயலாளர்,<br>
மத்திய திராவிடர் கழகம்,<br>
P. B. 325, மவுண்ட்ரோட்,<br>
சென்னை—2.

---

**தெளிவும் உறுதியும் செயலும் பெருகிட**

# சுயராஜ்ஜியம்!



**சித்திர புத்திரன்**

## — முதல் அத்தியாயம் —

★

கத்தி இன்றி இரத்தமின்றி இந்திய சுதந்தரம் பெற நடத்திய அஹிம்சைப் போராட்டத்தில் 945 தபால் ஆபீசுகள் 332 ரயில்வே ஸ்டேஷன்கள் கொளுத்தப்பட்டன, இடிக்கப்பட்டன. 60 இடங்களில் ரயில் கவிழ்க்கப்பட்டன.

இவை தவிர, கொளுத்தப்பட்ட சர்க்கார் கச்சேரிகள் பல. கொளுத்தப்பட்ட கோர்ட்டு ரிகார்டுகள் ஏராளம். கத்தரித்த தந்திக் கம்பிகள் பல மைல் நீளம்.

பெயர்த்த தண்டவாளங்கள் பல மைல்கள் தூரம், கொல்லப்பட்ட அதிகாரிகள் பலர், ஆகிய இவை யாவும் உங்களுக்குத் தெரிந்தது தானே.

### சுதந்தரம் கிடைத்த பின்பு.

இவைதாம் போகட்டும் என்றால் சுதந்தரம் கிடைத்த பின்பும் அஹிம்சா, சுயராஜ்ஜியத்தில் இடிக்கப்பட்ட வீடுகள் பல, கொளுத்தப்பட்ட கட்டடங்கள், கடைகள் பல, கொல்லப்பட்ட மக்களோ பலபல. கற்பழிக்கப்பட்ட பெண்கள் இன்னும் பல பல என்பதும் உங்களுக்குத் தெரிந்தது தானே.

### இந்து முஸ்லிம் ஒற்றுமை.

சுயராஜ்ஜியம் கிடைத்து விட்டால் இந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட்டு விடும் என்றார் காந்தியார். ஆனால் சுயராஜ்ஜியம் கிடைத்த பிறகு நூற்றுக்கணக்கான ஊர்களில் முஸ்லிம்கள் வீடுகள் கொள்ளை இடப்பட்டன. முஸ்லிம் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. முஸ்லிம் தொழில் ஸ்தாபனங்கள் கொளுத்தப்பட்டன. இவையும் உங்களுக்குத் தெரிந்தது தான்.

### இவ்வளவு தானா?

இவ்வளவும் தவிர இன்னமும் என்ன நடந்தது என்று பாருங்கள். ஏராளமான எதிர்க்கட்சியார் கூட்டங்கள் குழப்பத்தால் காலித்தனத்தால் கலைக்கப்பட்டன. அவர்களது மகாநாட்டுக் கொட்டகைகள் கொளுத்தப்பட்டன. மகாநாட்டு மக்களை அடித்துக் கண், கால் ஊனமாக்கி அவர்களது சாமான்கள், பணங்கள் வழிப்பறி செய்யப்பட்டன.

### பிறகு என்ன நடந்தது?

இவ்வளவு காரியம் சுயராஜ்ஜியம் கிடைத்த பிறகு செய்வதற்கு அஹிம்சா ஆட்சிக்கு உரிமை ஏற்பட்டும், இவ்வளவும் போதாமல் இந்தத் தர்ம ராஜ்ஜியத்தில் அடக்குமுறைச் சட்டங்கள் ஏராளமாக ஒவ்வொரு மாகாணத்திலும் செய்யப்பட்டன.

### இவ்வளவோடு நிற்கவில்லை.

எங்கு பார்த்தாலும் ஸ்ட்ரைக்கு, ஸ்ட்ரைக்கு! வேலை நிறுத்தம்,

---

**ஆனால் எதற்கு ஆகப் பிராமணன் இருக்கவேண்டும் என்று கேட்டால், அது வகுப்புத் துவேஷமாய் விடுகிறதாம்!**

---

வேலை நிறுத்தம்! என்பதாகவே கக்கூசு எடுப்பவர்கள் முதல் செக்ரட்டெரியேட் அதிகாரிகள் வரை நடந்தவண்ணமாயிருக்கின்றன.

### பஞ்ச தேவதை திருவிளையாடல்.

சோத்துப் பஞ்சம், துணிப் பஞ்சம் தாண்டவமாடின.

வியாபாரிகள் கள்ள மார்க்கெட்டும், சட்டசபை மெம்பர்கள் கொள்ளையும், அதிகாரிகள் லஞ்சமும், மந்திரிகளின் பாரபட்ச அநீதியும் ஆனந்தக் கூத்தாடின.

"சந்தடி சாக்கில் கந்தப்பொடிக்கு கால்பணம்" என்பதுபோல் வருணாச்சிரமம் வரம்பு கடந்து ஆட்சி புரிந்தது.

### ஆண்டவனிடம் பிராது.

இவ்வளவு நடந்தால் பிறகு மக்கள் என்ன செய்வார்கள். அழுதார்கள் ஆத்திரப்பட்டார்கள். ஆண்டவனிடம் முறையிட்டார்கள். ஆண்டவன்தான் என்ன செய்வான்? ஆண்டவனும் பார்ப்பன ரூபமாக இருந்துதானே உலகை நடத்துகிறார்.

இவை எல்லாம் ஆண்டவன் செயல்தானே?

ஆண்டவன் காரணம் என்றால் என்ன? பார்ப்பனர் காரணமென்றால் என்ன? இரண்டும் ஒன்றுதானே?

எனவே ஆண்டவன் பிராதை வாங்கிக் கொண்டு யோசித்தார் யோசித்தார், வெகுதூரம் யோசித்தார். எவ்வளவு தூரம்? யோசனை தூரம் யோசித்தார்.

யோசித்து என்ன முடிவுக்கு வந்தார்? வந்தார் ஒரு முடிவுக்கு. கண்டுபிடித்தார் ஒரு சங்கதியை அதாவது கொலம்பஸ் அமெரிக்காவை கண்டு பிடித்ததுபோல் கண்டு பிடித்தார்.

என்ன கண்டு பிடித்தார் என்றால் இவ்வளவு அக்கிரமத்துக்கும் அநீதிக்கும், கொலைக்கும், கொள்ளைக்கும், நாசத்துக்கும், கற்பழிப்புக்கும், கொலை பாதகத்துக்கும் காந்தியார்தான் காரணம் என்று கண்டு பிடித்தார். சரியான கண்டு பிடிப்புத்தானே இது? சரியோ தப்போ ஆண்டவன் கண்டுபிடித்த முடிவு என்றால் அப்புறம் அப்பீல் ஏது.

### தீர்ப்பு.

முடிவுக்கு ஏற்ற தண்டனை வேண்டாமா? வேண்டும். யோசித்தார் யோசித்தார். இரம்பவும் குறைந்த தண்டனை கொடுக்க வேண்டுமென்று கருதி ஒரு சிறு தண்டனை கொடுத்தார். எப்படிக் கொடுத்தார்? தன்னடிச் சோதிக்கு அழைத்துக் கொள்வது என்ற மோட்சப் பிராப்த (மரண) தண்டனை கொடுத்தார். அதை எப்படி நிறைவேற்றினார் என்று கேட்பீர்கள். தானே கொலையாளியாய் இருந்து கொல்லுகிற மரண

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

மறம் மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
என நான்கே ஏமம் படைக்கு.

—திருவள்ளுவர்.

குடி அரசு

3—4—48 சனிக்கிழமை.

# நமது இயக்கமும் திராவிட மாணவத் தொண்டர்களும்!

★

பணவசதியும் சிபார்சு வசதியும் உடையவர்களே, இன்றையப்படிப்புத் துறையில் முன்னேற்றமடைய வேண்டும் என்கிற நோக்கத்தோடு தான் இப்போதையக் கல்வித் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படைதான் திராவிடர்கள் 100-க்கு 90-பேருக்குமேல் படியாதவர்களாய் இருப்பதற்குக் காரணமாகுமென்றால் இதை அவினாசிலிங்கமவர்களோ, மற்றவர்களோ மறுத்துச் சொல்ல முடியாது.

திராவிட சமுதாயத்தில் நூற்றுக்குப் பத்துப் பேராவது படித்திருக்கின்றார்கள் என்று சொல்லப்படுகிற கணக்கு, தன்பெயரிலே கூட இரண்டொரு எழுத்துக்களை விட்டு விட்டுக், கையெழுத்துப் போடும் நபர்களையும் சேர்த்துக் கூறுவதாகும் என்கிற உண்மையைத் தெரிந்தால், "பார்ப்பனர்கள் அளவில் படித்தவர்கள்" என்கிற எடைபோடும்போது 100க்கு 5 பேர்கூட படித்தவர்கள் என்று சொல்லுவதற்குத் தகுதியுடையவர்கள் ஆகமாட்டார்கள் என்பதும், இந்த அய்ந்து பேர்கூட திராவிடர் கழக (நீதிக்கட்சி) க்கிளர்ச்சியின் பயனால் படித்தவர்கள் ஆனார்கள் என்பதும், திராவிட சமுதாயம் என்கிற உரிமையினால் இந்த அய்ந்து பேரும் படிக்கவும், படித்து உத்தியோகமோ மற்ற தொழில்களோ கைக்கொண்டு வாழவும் ஆனநிலை ஏற்பட்டிருந்தாலும், இந்த அய்ந்து பேர்களில் அரைக்கால் பேர்வழிகூட திராவிட சமுதாயத்தின் நன்மைக்கான காரியங்களில் கருத்தைச் செலுத்துவோர் இல்லை என்பதும், அதற்குமாறாகத் தன் சமுதாயத்தைக் காட்டிக் கொடுத்து, அடமானம் வைத்து, கிரையம் செய்து கொடுத்து விட்டுத் தங்கள் சொந்த வாழ்வுக்கு, வயிற்றுச் சோற்றுக்கு வழி செய்து கொண்டவர்களே ஏராளம் என்பதும், இந்த மாதிரியான போக்கிலே படித்தவர்கள் என்பவர்கள் போய்க்கொண்டிருப்பதினால் தான் திராவிட சமுதாயம் சூத்திரச் சமுதாயமாக, சண்டாளச் சமுதாயமாக, வேசை மக்கள் சமுதாயமாக இருந்து வரும் நிலைமை இருக்கிறது என்பதும் எவரும் இல்லை என்று சொல்லி விடமுடியாத சங்கதிகளாகும்.

திராவிட மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடவேண்டிய இந்தப் படித்தவர்கள் கூட்டம், அவ்வாறு செய்யவில்லைஎன்பதை அக்கூட்டம் உணருவதற்கு மறுத்தபோதிலும், நாளைக்குப் படித்தவர்கள் கூட்டத்தில் சேரவிருக்கின்ற மாணவர்கள், இந்த நிலைமையைத் தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

திராவிட மாணவர்கள், அதாவது திராவிட மாணவர்கள் என்கிற பெயரினால் தங்களைஅழைத்துக்கொள்ள முன்வந்து, திராவிட மாணவருலகின் முற்போக்குக்கும், திராவிட மக்களின் நல்வாழ்வுக்கும் பாடுபடச் சபதம் புரியும் மாணவத் தோழர்கள், படித்தவர்களின் வஞ்சகப் போக்கை மற்றவர்களைக் காட்டிலும் நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

விறுவிறுப்பான பேச்சு! சுறுசுறுப்பான நடவடிக்கை! உண்மைக்குப் பரியும் உள்ளம்! உலுத்தரை ஒழிக்கும் தீவிரம்! எடுப்பான தோற்றம்! எதற்கும் அஞ்சாத நோக்கு! இத்தனையும் உண்டு வாலிபத்துக்கு. இன்னும் பல நல்ல இயல்புகளுமுண்டு.

இந்த நல்லியல்புகளை மட்டுமே எடுத்துக்கூறி, பாராட்டுக்குமேல் பாராட்டு என்று சுமத்தி, இளைஞர்களே எதிர்கால மன்னவர்கள் என்று சரணம்பாடி முடிப்பது தான் மாணவர்களுக்கிடையே பேசும் அறிஞர்கள், தலைவர்கள் என்பவர்களின் வழக்கம்.

இத்தகைய பாராட்டுரை பயனைத் தரும்! எந்த அளவுக்கு? தன் வேலையை நிறைவேற்றிக் கொள்ள விரும்பும் ஒருவர், ஒரு சிறுவனைத் தட்டிக் கொடுத்துத் தன் வேலையைச் சாதித்துக் கொள்ளும் அளவில். புகழ்ந்து கெடுத்தல் என்று இதனைச் சொல்வதை எல்லோரும் ஒப்புக்கொள்ள மறுத்தாலும்கூட, புகழ்ந்து பேசி மற்றவர்களின் சக்தியைத் திரட்டித் தன் சொந்தக் காரியத்தைச் சாதித்துக் கொள்வதுதான் இதன் பயன் என்றால், இதனால் புகழப்பட்டவருக்குப் பயன் சிறிதும் இல்லை என்றால் யாரேனும் மறுத்துவிட முடியுமா?

வேலைக்கு முன் கூலி! செயலுக்கு முன் பாராட்டு! வேண்டப்படலாம்! ஆனால் நிரந்தரமானதாய் இருக்கலாமா? இதுவே நிரந்தரமானால் ஏமாற்றமும் தோல்வியுமே பெருகும் அல்லவா? இதனை மாணவத் தோழர்கள் நன்கு சிந்தித்துத் தெளிவடைய வேண்டும்.

திராவிட மாணவர்கள் என்பவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய பொறுப்பும், நிறைவேற்ற வேண்டிய செயலும் மிக மிகக்கடினமானவை. பல தலைமுறை தலைமுறையாகப்பகுத்தறிவுக்குவேலையின்றி வாழ்ந்த சமுதாயத்தை அழித்து, பகுத்தறிவு ஒளி வீசும் புதுச் சமுதாயத்தை நிர்மாணிக்கும் பொறுப்பு! தலை கீழ் மாற்றமான இப்பொறுப்பைத் தத்தம் வாழ்வையே ஈடுகட்டி விட்டு, உயிரைப்பணயம் வைத்து, உண்மையும் அன்புமே ஆயுதமாகக் கொண்டு போராடி வெற்றிகாண வேண்டிய செயல்! இச்செயல் பலரால் பல முறை முயற்சிக்கப்பட்டதுதான்; ஆனால் எவரும் இதுவரை வெற்றி காணாதது! என்கிற இலட்சியத்தின் பொறுப்பை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்!

மிகமிகக் கடினமான இந்த லட்சியத்தையும், செயலுக்கு முன் பாராட்டு என்கிற போக்கையும் சேர்த்து எண்ணினால், இந்தப்

ரோஜா முத்தையா

போக்கு இலட்சியப் பாதையைக் காண்பியாது என்பது உறுதி.

சென்ற மாதம் திருச்சியில் நடைபெற்ற திராவிட மாணவர் மாநாட்டில், நம்மியக்கத்தைப் பின்பற்றும் திராவிட மாணவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? என்கிற கருத்தை விளக்கிப் பெரியாரவர்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதி மற்றொரு பக்கத்தில் வெளியாகி இருக்கிறது. அதனை ஒவ்வொரு மாணவத் தோழர்களும், கழகத் தொண்டர்களும் கட்டாயம் படித்துப் பார்த்துத் தங்கள் தங்கள் நிலைமையோடுஒப்பிட்டுத், தங்களைத் தாங்களே சோதனை செய்து கொள்வது நல்லது என்று சொல்ல ஆசைப்படுகிறோம்.

பெரியாரவர்கள் விளக்கியிருக்கும் ஒருஉண்மை, அதாவது மாணவர்கள் என்பவர்கள் சரியான சோல்ஜர்கள், நல்ல ஜெனரல்கள் அல்ல. நல்ல சிப்பாய்கள் ஆனால் நல்ல கமாண்டர்களல்ல என்றுகூறியிருக்கும் கருத்து மாணவர்கள் மனதில் நல்ல முறையில் பதிவு பெற வேண்டிய ஒன்றாகும்.

தாய் என்றால் அது மற்றொரு சொல்லையும், கணவன் என்றால் அது மற்றொரு சொல்லையும் எதிர்பார்க்கும் இயல்புடைய, ஒவ்வொரு முறைச்சொல் என்பது போலவே, மாணவர்கள் என்பதும் ஆசிரியர் என்பதையோ கற்பித்துக் கொடுப்பவர் என்பதையோ காட்டும் மாற்றொரு சொல்லை, எதிர்பார்த்து வழங்கும் ஒரு முறைச் சொல் என்கிற உண்மை தமிழ் மொழி பேசும் எவரும் அறிந்த ஒன்றாகும்.

உலகையே ஏடாகக் கொண்டு, மனிதன் ஒவ்வொருவனும் சாகும் வரைக்கும் கற்றுக் கொண்டேயிருக்கிற பேருண்மையை எண்ணி, உலகிலுள்ள ஒவ்வொருவரையும் மாணவர் என்றே குறிப்பிடுவது ஒருவகையில் பொருந்துமென்றாலும், குடும்பப் பொறுப்போ, பணக்கவலையோ, உழைப்பின் திறமோ உட்கொள்ளாத, அனுபவக் கல்வியைக் கற்க வாய்ப்பில்லாத இளம் பருவத்தையுடையவர்களையே இங்கு மாணவர்கள் என்று குறிப்பிடுகின்றோம்.

மாணவர்கள் என்று சொல்லும் போதே, அந்தச் சொல் இளமைப் பருவத்தையும், உலக அனுபவமில்லாமையையும் உணர்த்துவதாகும் என்கிற உண்மை மாணவர்கள் மனதில் இடம் பெறுவதே, சோல்ஜர்கள்! சிப்பாய்கள்! என்கிற கருத்தைப் பதிவு செய்து கொள்ளுவதற்கு வழியாயிருக்க முடியும்.

“திராவிடர் இயத்தில் மாணவர்கள் பங்குகொள்வதை நாங்கள் பெருஞ் செல்வமாக மதிக்கின்றோம், அவர்களைப் பெரியசொத்தாகக் கொண்டு போற்றுகின்றோம்” என்று கூறியிருக்கிறார்கள் பெரியார் அவர்கள். ஆம்! நைந்தழுகி முடைநாற்றம் நாறும் ஒரு சமுதாயத்தின் நிலைமையை மாற்றப் போராடும் ஒரு பெருவீரன், அச்செயலுக்கு உதவியாக முன்வரும் கட்டிளங்காளைகளைக் காணும்போது உவந்து கூறும் உள்ளக் களிப்பிற்பிறந்த சொல்லே இது.

மத நம்பிக்கையுடைய கிறிஸ்துவப் பாதிரிமார்களையும், கன்னிப் பெண்களையும் மாணவத் தோழர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். அவர்களுடைய ஒழுக்கத்தின் உயர்வை இங்கு நாம் குறிப்பிடவில்லை. காணாத கடவுளின் பேரால், இல்லாத மோட்ச ஆசையைத் தூண்டி, புரியாத புண்ணிய பாவம் பேசி, இவ்வுலகத்தையே தாங்கள்நம்பிய “சிறந்தமார்க்கத்தில்” செலுத்திவிடவேண்டுமென்று, தங்கள் வாழ்வின் சுகபோகத்தைத் துறந்தவர்களாய்க் காண்பித்து, மக்களுக்காகவே வாழுகிறோம் என்கிற நிலைமையை எப்படி உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தான் எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம். இந்த மதவாதிகள், மதத்தொண்டர்கள் எவ்வாறு உலகை ஏமாற்றுகிறார்கள் என்பது நமக்குத் தெரிவது போலவே, அவர்களுடைய தன்னலம் பேணாத உழைப்பையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

அழிவிற்கே காரணமாக இருந்து வந்த மத வெறியைப் பரப்பும் ஒரு மதத்திற்கே, அது உயிர் வாழ்வதற்கு இப்பேர்ப்பட்ட தொண்டர்கள் வேண்டு மென்றால், அழிந்து கொண்டிருக்கும் ஒருசமுதாயம் புத்துணர்வு பெற்றுப் புது வாழ்வு பெறவேண்டுமானால், அந்தச் செயலுக்கு எப்படிப்பட்ட தொண்டர்கள் வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

உலக இயற்கைக்கு மாறுபட்டு ஆண் பெண் கூட்டுறவைத் தள்ளிப், பெண்களைப் பேய்கள் என வெறுத்து, நிலையான நித்திய இன்பத்தையடைய முயலுகிறோம் என்று கூறிக், கானல் நீருக்கு அலைந்த உண்மையான துறவிகள் போக்கை நாம் வெறுத்தாலும்கூட, அந்த லட்சியம் நிறைவேறுவதற்காக அவர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்று விதித்திருக்கும் கடுமையான முறைகளை, எந்த லட்சியவாதிதான் வெறுத்துவிட முடியும் என்று கேட்கிறோம்.

தனி ஒரு மனிதன்யடையலாம் என்று “எதிர்பார்த்த ஒரு இன்பத்திற்கே” இப்பேர்பட்ட கடுமையான நெறிகளைக் கைக்கொள்ள வேண்டு மென்றால், ஒரு மனித சமுதாயமே தன்நைந்த நிலைமாறி இன்ப வாழ்வைப் பெற,எப்பேர்ப்பட்ட நெறிகளைக் கைக்கொள்ள வேண்டும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

பொதுநலத் தொண்டில் ஈடுபடுகிறவர்கள், முதலில் பொதுநல சேவைக்கும் தங்களுக்கும் என்ன பொருத்தம்? எந்தெந்த வகையில் இருக்கிறது? என்கிற தங்களின் தகுதியைத் தாங்களே தெரிந்து கொள்ளவேண்டும். எழுதும்தகுதி, பேசும் தகுதி ஆகிய இரண்டு தகுதியைக் காட்டிலும் சிறப்புடையது நடந்து காட்டும் தகுதி என்றாலும், இம்மூன்றினும் சிறப்பாகப் பொதுநலத் தொண்டர்களுக்குரிய குணத்தகுதி தங்களுக்கு இருக்கிறதா என்பதையே மாணவத் தோழர்கள் கருதவேண்டும். இதைத்தான் பெரியாரவர்கள் தம் சொற்பொழிவில் வற்புறுத்தியிருக்கின்றார்கள்.

எளிய வாழ்க்கையைக் கைக்கொள்ளல், தன்னைத்தானே காத்துக்கொள்ளுதல், தன்னலம் பேணாது வாழ்தல், தற்பெருமை பேசாத அடக்கம், உயர்ந்தவன் என்ற மமதைக்கு இடங்கொடாமை, வெற்றி தோல்வியைப்பற்றிக் கவலைப்படாத வீர இயல்பு, தலைவனின் ஆணைக்கு அடங்கல் போன்ற நற்குணங்களே தொண்டர்களுக்கு, சிறப்பாகத் திராவிட மாணவர்களுக்கு வேண்டிய குணத்தகுதிகள் என்று பெரியாரவர்கள் வற்புறுத்தியிருப்பதைக் கருத்தூன்றிப் படித்துக் கைகொள்ள வேண்டுகிறோம்.

இவைகளை வாழுகிற ஒவ்வொரு மனிதனும் கடைபிடித்தொழுகுவதே வாழ்வில் ஒழுங்கையும், அமைதியையும் உண்

பண்ணும் என்று பொதுவாகச் சொல்லலாமானாலும், எதிர் நீச்சலில் சென்று வெற்றிக் கொடியை நாட்ட வேண்டிய பொறுப்புடைய தொண்டர்களுக்கு இவைகள் அவசியத்திலும் அவசியமல்லவா?

பொதுநல சேவையில் அதுவும் திராவிடரியக்கத்தில் எத்தனை தொண்டர்களுக்கு வேண்டுமானாலும் இடமுண்டு! தொண்டர்களின் வாழ்வு நல்ல முறையில் அமைவதற்கும் வழியுண்டு! உண்மையாகவே இயக்கத்திற்குத் தம்மை அர்ப்பணம் செய்து கொள்ளுபவர், தம் ஒழுங்கான சொந்த வாழ்வைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்றே சொல்லிவிடலாம்! இந்தநல்லநிலைமைபெரியாரவர்களுடைய அரும்பெரும் உழைப்பினால் உண்டாக்கப்பட்டிருக்கிறது! இதைப் பயனின்றிப் போகுமாறு செய்யலாமா? இதை மாணவத் தொண்டர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும்.

வழக்கம்போல இந்த வருஷத்திலும் மாணவர் கோடை விடுமுறைப் பிரச்சாரத்திற்கு ஏற்பாடாகி அது சம்பந்தமான அறிக்கை மற்றொரு பக்கத்தில் வெளியாகியிருக்கிறது. வகுப்பு நடைபெறும் காலம் மாற்றவேண்டியதாகவும் ஏற்படலாம். அது பின்னர் அறிவிக்கப்படும். இப்பிரச்சாரத்திற்குச் சென்ற ஆண்டு வந்தவர்களும், புதிதாக இவ்வாண்டில் வருகிறவர்களும் வந்துகலக்கலாம். பிரச்சாரத்திற்கு வருகின்றவர்கள், தங்கள் பிரச்சாரத்தினால் மற்றவர்களை நல்வழியில் அழைத்துப் போகிறோம் என்று எண்ணுவதைக் காட்டிலும், தாங்கள் நல்ல வழியில் பாதையைப் பின்பற்றிப் போகின்றோம் என்று எண்ணுவார்களானால் அது, உண்மையும் பயனுமுடையதாயிருக்கும் என்று சொல்ல ஆசைப்படுகின்றோம்.

பெரியாரவர்கள் வற்புறுத்தியிருப்பதைப் போல, கட்டுப்பாடற்ற காலித்தனத்தைப் பழக்கமாக உடைய மைனர்களாயிருக்க ஆசைப்படுகின்றவர்களோ, வாழ்க்கையில் தங்கள் நிலைமைக்கு மேலான போக போக்கியத்தை அடைய வேண்டும் என்று ஆசைப்படுகின்றவர்களோ, பிரசாரம் செய்வது போன்ற பொது நலப் பணிக்குத் தம்மை ஆளாக்கிக் கொள்ளலாமா? அவ்வாறு செய்வதால் இயக்கத்திற்கு ஏற்படும் நன்மை என்ன? தாங்கள் அடையும் நன்மை என்ன? என்பவைகளை முதலிலேயே முடிவு கட்டிக் கொண்டு விடுவது நல்லதல்லவா என்பதையும், யோசித்துத் தீர்ப்புக் கூட்டிக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

மாணவர்கள் கைக்கொள்ள வேண்டிய அகிம்சையில் நம்பிக்கையைப் பற்றி, பெரியாரவர்கள் வலியுறுத்தியிருப்பதையும் திராவிட மாணவர்கள் சிந்தித்துத் தெளிவடைய வேண்டும்.

"அகிம்சை என்பது புண்ணியம் என்பதினாலோ, அல்லது அது மோட்சலோகக் கதவைத் திறந்து விடும் என்பதினாலோ அல்லது அந்தராத்மாவோடு தொடர்புடையது என்பதினாலோ நான் அகிம்சையைக் கைக் கொள்ள வேண்டும் என்று கூறவில்லை; மனிதனுக்கு அறிவு இருப்பதினாலேயே—சிந்தனைத் திறம் பெற்றிருப்பதினாலேயே, அவன் அகிம்சையைத்தான் கைக் கொள்ள வேண்டுமென்கின்றேன்" என்று கூறியிருப்பதை அறிவு பெற்றிருக்கிறோம் என எண்ணும் ஒவ்வொரு மனிதனும் எண்ணிப் பார்க்க வேண்டியதாகும்.

மற்றஜீவப்பிராணிகளைப் பார்க்கின்றோம். அவைகளுள் பெரும்பான்மையானவை ஒன்றை யொன்று இம்சை செய்து உயிர் வாழ்வதையும், அதனால் அந்த இம்சைக்கு உள்ளானது மட்டுமல்லாமல், உள்ளாக்கியதும் துன்பத்தை, தொல்லையையடைவதையும், அவைகள் மனிதனுக்கே உள்ள ஆறாவது அறிவை, சிந்தனை செய்யும்திறமையைப்பெறவில்லை என்பதையும் பார்க்கிறோம். மேலும் அந்த அய்ந்தறிவு படைத்த மிருகங்களிலும்கூட ஆடு, மாடு, மான்போலச் சில மிருகங்கள், இம்சை முறையைக் கைக்கொள்ளாமல் வாழ்வதையும் பார்க்கின்றோம்.

இம்சை செய்யப்பட்டவனுக்கேயன்றி, செய்தவனுக்கும் துயரத்தை தொல்லையைத் தருமென்றால், அய்ந்தறிவு படைத்த சில மிருகங்கள் கூட அந்த இம்சை முறையைக் கைக்கொள்ள வில்லையென்றால், ஆறறிவு படைத்தவன் என்றும், ஆராய்ந்து பார்க்கும் திறனுடையவன் என்றும் சொல்லிக் கொள்ளும் மனிதன், இருவருக்கும் துன்பத்தைக் கொடுக்கும் இன்னாச் செயலை, இம்சையை மேற்கொள்ளல் அறிவுடைமையாகுமா? என்பதை எண்ணிப் பார்க்கவேண்டுகிறோம்.

பொழுது போக்குவதற்கான வேலை! பல ஊர்களைச் சுற்றிப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம்! விளம்பரத்தினால் பெரியமனிதர்களாகும் வாய்ப்பு! சிகரெட் குடிக்கவும், சினிமாப் பார்ப்பதற்குமான கம்பெனி! என்பது போன்ற எண்ணங்களால் திராவிட இயக்கப் பிரசார வேலையிலே தயவுசெய்து இளம்மாணவர்களே! நீங்கள் இறங்கக்கூடாது என்பதுதான் நமது வேண்டுகோள்! சமுதாய இழிவை உணர்ந்து, இழிவை நீக்கும் பொறுப்பு நமக்குத்தானே ஒழிய மற்றவர்களுக்கில்லை என்பதை அறிந்து, "வாழ்வோம் அல்லது வீழ்வோம்" என்ற துணிவு கொண்டு, கட்டுப்பாட்டுக் கடங்கித் தன்னலம் வெறுத்துத் தன்கையே தனக்கு உதவி என்ற தன்னம்பிக்கை வாய்ந்த, இளம் மாணவத் தொண்டர்கள் பெருகவேண்டும் என்பதுதான் நமது ஆசை!

இந்த நமது ஆசையும், வேண்டுகோளும் திராவிட சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்கே என்பதை உணர்ந்து, திராவிட மாணவர்கள் பெருவாரியாகச் செயலில் ஈடுபடத் துணிவு பெற்று வாகை மாலை சூடுவார்களாக.

## ஏஜண்டுத் தோழர்களுக்கு.

மார்ச்சு மாதத்தில் பில்லுடன் அனுப்பப்படும் மற்றொரு அறிவிப்பில் கண்டபிரகாரம் மார்ச்சு மாதம் முடிய ஏற்படும் தொகையையும், இனிமேல் கொண்டு பத்திரிகை அனுப்பப்படுவதற்காக பிரதி 25 காப்பிகளுக்கு ரூ 20-0-0 வீதம் ஏற்படுகிற டிபாசிட் தொகையையும் சேர்த்து இம்மாதம் 10-தேதிக்குள் நமக்கு அனுப்பி வைக்கவேண்டுகிறோம்.

அவ்வாறு அனுப்பாத ஏஜண்டுகளுக்கு 10-தேதி பத்திரிகை கண்டிப்பாய் நிறுத்தப்பட்டு விடும்.

மானேஜர்.

# தோழர்களே! தூத்துக்குடி அழைக்கிறது!

பெரியார் முழக்கம் [illegible]
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(7ம் பக்கத் தொடர்ச்சி)

தண்டனை கொடுத்தார். கடவுள் பார்ப்பன ரூபம் தானே, ஆதலால் பார்ப்பனனாக, கோட்சேயாக, பி. ஏ. படித்த பார்ப்பனனாக வந்தார். ஒன், டூ, திரி, என்று மூன்று வேட்டுகள் போட்டார். சரி காந்தி முடிந்தார். மோட்சமடைந்தார்.

இந்தப் பிராதை கடவுளே அல்லாமல் ஒரு சர்வதேச சங்கம் விசாரித்தாலும் இந்தத் தண்டனைதானே கொடுக்கும் இதற்குக் கடவுள்எதற்கு? என்று சிலர்கேட்கலாம்.

அதற்கும் இதற்கும் வெகு வித்தியாசம் உண்டு.

சர்வதேச சங்கம் தண்டனை கொடுத்தால் காந்தியாருக்கு அது தெரியும். தண்டனை நிறைவேற்றப்படும்வரை அவர்மனம் பதறும். அப்பீல் அல்லது கருணை மனு போடச் சொல்லும். பிறகு என்ன ஆகுமோ? கடைசி காலத்தில் அவர் மனம் வருந்தலாமா? ஆகையால் ஆண்டவன் அந்தப்பிராதைத் தன் பைலிலேயே வைத்துக்கொண்டு காந்தியாருக்கும் மனம் நோகாமல் பிராதுக்காரருக்கும் திருப்தி ஏற்படும்படி பார்ப்பனனாகவே ஆண்டவன் வந்து கேசையும் தண்டனையையும் முடித்துத் தள்ளி விட்டார்.

கடவுளே கொலைகாரனாக வந்து காந்தியைக் கொன்று விட்டதால், கொலை செய்யப்பட்ட விஷயமும் கிணற்றில் விழுந்த கல்லுப்போல் அடியில் போய் அமர்ந்து விட்டது.

அடுத்தபடி நேரு கேஸ் விசாரணையில் இருக்கிறது. பிரசாத்துக்கு வாரண்டு வந்து தேடுகிறது.

அஹிம்சா தர்ம சுயராஜ்ஜியத்தின் முதல் அத்தியாயம் முடிந்தது.

## தூத்துக்குடியில் மாகாண மாநாடு.

★

மாநாட்டிற்கான சகல ஏற்பாடுகளும், வெளியூர்த் தோழர்களுக்கு வேண்டிய சகல சவுகரியங்களும், வசதிகளும் செய்ய எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. விபரம் பின்னர் அறிவிக்கப்படும். ''சவுகரியக் குறைவு'' என்று எவரும் எண்ணிவிடக் கூடாது என்பதை எண்ணியே இங்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன என்பதை விவரம் கேட்கும் தோழர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கே. வி. கே. சாமி.
செயலாளன்.

[5ம் பக்கத் தொடர்ச்சி].

ஏமாற்றம்ஏற்படுமானால் அதைச் சகித்துக்கொள்ளக்கூடிய பொறுமைவேண்டும். மாணவர்களுக்கு மற்றுமொரு கெட்ட நோய் இருந்து வருகிறது. ஒன்றிரண்டு தடவை மேடை ஏறினால் போதும். ஒன்றிரண்டு தடவை கைதட்டல் கிடைத்து விட்டால் அதைவிட மேலாக்கப் போதும். பத்திரிகைகளில் அவர்களால் எழுதப்பட்ட ஒன்று இரண்டு கதைகளோ பாட்டுகளோ வியாசங்களோ வந்துவிட்டால் போதும். உடனே தங்களைப் பெரிய தலைவர்கள் என்றும், ஆசிரியர்களென்றும், தங்களை மற்றவர் யாவரும் மதிக்கவேண்டும் என்றும் நினைத்துக்கொண்டு விடுவார்கள். இது மகா அபாயகரமான நோய். இந்நிலை வந்து விட்டால் எப்படிப்பட்ட இயக்கமும், கொள்கையும் அவர்களைச் சீக்கிரம் கைவிட்டு விடும். அதற்கப்புறம் அவன் சீக்கிரத்தில் பொது வாழ்வில் வெறுப்பேற்பட்டு எதற்கும் தகுதியற்றவனாகிவிடுவான். ஆகவே தான் அடக்கம் வேண்டும் என்று அவ்வளவு வற்புறுத்திக் கூற வேண்டி யிருக்கிறது.

### எனது அநுபவம்.

நானும் மாணவனாய் இருந்திருக்கிறேன். ஆணவம் பிடித்தமைனராயும் இருந்திருக்கிறேன். சர்வாதிகாரக் காலியாயுமிருந்திருக்கிறேன். ஆனால் பொதுத் தொண்டுக்கு வந்த பிறகு சகல சுகத்தையும் கைவிட்டேன். என்னை ஒரு சாதாரண மனிதனாகவே கருதிக்கொண்டு யாராவது கூப்பிடும் வரையில் பின்னணியிலேயே இருந்து வந்தேன். அதனால் தான் என்னால் சலிப்பு இல்லாமல் ஏமாற்றமில்லாமல் பொதுத்தொண்டைத் தொடர்ந்து செய்து வரமுடிகிறது. எனக்குரிய பங்கோ மரியாதையோ கிடைக்கவில்லையே என்று நான் ஒரு நாளும் ஏமாற்றமடைந்ததில்லை.

என் வாழ்க்கையில் நடைபெற்ற சாதாரணச் சம்பவம் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அது 1916அல்லது 1917ல் நிகழ்ந்திருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். அப்போது நான் ஈரோடு முனிசிபல் சேர்மன் ஆக இருந்த காலம். அப்போது நான் ஒரு பெரிய புரஹாம் வண்டி வைத்திருந்தேன். ஊத்துக்குழி ஜமீந்தார், ஆனரபிள் சம்பந்த முதலியார் மற்றும் 3, 4 பிரபலஸ்தர்கள் என்வீட்டிற்கு வந்திருந்தனர். எல்லோருமாகச்சேர்ந்து ஒரு இழவு வீட்டுக்குத் துக்கம் விசாரிக்கப் போக வேண்டியிருந்தது. ஜமீந்தார் முதலிய எல்லோரையும் வண்டியில் அமர்த்தினேன். வண்டியில் மேற்கொண்டு இடமில்லை. நான் ஒருவன் தான் பாக்கி. வண்டி அவர்களைக்கொண்டு போய்விட்டுவிட்டுத் திரும்பி வரவேண்டுமென்றால் நேரமாகி விடும். ஆதலால் என்னையும் உடன்வர வில்லையா என்று ஜமீன்தார் கேட்டதற்கு, இதோ பின்னால் வருகிறேன் என்று பதில்கூறி வண்டியை விடுஎன்று சொல்லிவிட்டு, அவர்கள் அறியாமலே நான் வண்டி மீதேறி கோச்மேன் பக்கத்தில் அமர்ந்து கொண்டேன். குறிப்பிட்ட இடத்தை வண்டி அடைந்ததும், அவர்கள் இறங்கவும், கோச்மேன் பக்கத்திலிருந்து நான் இறங்குவதைப் பார்த்து அவர்கள் திடுக்கிட்டார்கள். அன்றையிலிருந்து என்னை அவர்கள் ஒருபடி உயர்வாகவே மதிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஜமீன்தார் என்னைக் கண்டால் பெரிய ஞானி என்று குனிந்து கும்பிடுவார். நான் அவரைப் பரிகாசம் செய்வேன். கோச்மேன் பக்கத்தில் உட்காருவதை நான் கேவலமாக மதிக்கவில்லை என்பதையும், விருந்தினர்களுக்காக எனது சௌகரியத்தை எந்த அளவுக்கும் விட்டுக்கொடுக்கத்தயாராக இருந்து வருகிறவன் என்பதையும், அவர்கள் அறிந்து கொண்டதினால் தான் என்னை மிக மேலானவனாகக் கருதத் தொடங்கிவிட்டார்கள்.

### விட்டுக்கொடுப்பது வீணானதோ இழிவானதோ அல்ல.

இப்படி நம் சௌகரியத்தைப் பிறருக்காக விட்டுக் கொடுப்பது இழிவல்ல. தப்பிதமுமல்ல. நான் காங்கரஸ் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றியபோது கூட நான் மூன்றாம் வகுப்பில்தான் பிரயாணம் செய்வேன். ராஜகோபாலாச்சாரியாரும், திரு வி. கவும் இரண்டாம் வகுப்பில்தான் பிரயாணம் செய்வார்கள். திரு வி. க. அவர்கள் அதற்காக வெட்கப்படுவார். கூச்சப்படுவார். ''உடம்புக்கு சௌகரியமில்லாதபோது நீங்கள் இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்வது தவறாகாது'' என்று

**தொடர்ந்து வருவீர் அணியணியாக!**

நான் கூறி அவர்களைச் சமாதானப் படுத்துவேன். மாணவர்கள் இம்மாதிரி இளமை முதற் கொண்டே தம்வாழ்க்கைச் சௌகரியத்தை மிக எளிதாக்கிக் கொள்ள வேண்டும். சாதாரண உணவில் திருப்தி அடைய வேண்டும். நான் காங்கரஸ் தலைவனாய் இருந்தபோது கூட எவ்வளவோ தர்க்க வாதம் செய்வேன். ஆயினும் ராஜகோபாலாச்சாரியார், திரு வி. க. ஆகியவர்களின் ஆலோசனையின் பேரில்தான் எதையும் செய்து வந்தேன். எதிலும் அவர்கள் அபிப்பிராயப்படியே செய்வேன். விட்டுக் கொடுப்பதில், தலைவர்களை மதிப்பதில், நான் மிக்க தாராளமாக நடந்து வந்தேன். அந்தப்படியே நீங்களும் எதிலும் பிறருக்குக் கொஞ்சம் விட்டுக் கொடுக்கத் தயாராகத்தான் இருக்க வேண்டும்.

### மாணவர்களுக்கே பாத்தியதை.

திராவிடக்கழகம்கடைப்பிடித்துள்ள கொள்கைகள் மிகக் கஷ்டமானவைகள். திராவிட கழகம் கூறும் பரிகாரங்கள் கூட மிகக் கசப்பானவையாகத்தான் இருக்கும். இக்கொள்கைகள் பெரும்பாலும் மாணவர்களால்தான் ஈடேற்றப்பட வேண்டாம். மாணவர்கள்தான் தம் பின் சந்ததியைப்பற்றி அதிகம் கவலைப்பட வேண்டியவர்கள். ஆகவே அவர்கள்தன் முதியோரைக் காட்டிலும் அதிக உற்சாகத்தோடு திராவிடக் கழகத்தில் சேர்ந்து பணியாற்ற வேண்டும்.

### அறிவின் அடையாளம் அகிம்சை.

மாணவத் தோழர்களுக்கு அகிம்சையில் நம்பிக்கை இருக்க வேண்டும்; புண்ணியம் சம்பாதித்துக் கொள்வதற்காக அல்ல. ஹிம்சை சகலருக்கும் பொது, யாவருக்கும் துன்பத்தைக் கொடுக்கக் கூடியது என்பதற்காகத்தான்.

நமக்கு அறிவிருப்பதே நம் காரியங்களை ஹிம்சையின்றி சாதித்துக் கொள்ளத்தான். அறிவு இருக்கும்போது மிருகத்தனத்தை ஏன் நாம் கடைப்பிடிக்க வேண்டும். மனிதத் தன்மைக்கு மிக அவசியமானது அகிம்சைதான்.

நாம்தானே இந்நாட்டில் பெரும்பான்மை மக்களாக இருக்கிறோம். பலாத்காரத்தை வளர்த்தால்நாம்தானே அதற்குப் பலியாக நேரிடும் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். முடிவாக ஒன்று சொல்லுகிறேன். நீங்கள் நல்ல எளிய முறையில் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உங்கள் வாழ்க்கை லகுவானதாக இன்பமானதாக இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக உங்களுக்கு அளவற்ற பொறுமையும் அடக்கமும் கீழ்ப்படிதலும் வேண்டும்.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

தலையும் செய்து விடவில்லை. அது எப்பொழுதும் போலவே தன்னுடைய வேலைகளைச் செய்துகொண்டு தானிருக்கிறது. இதுவரை திராவிடர் கழகம், பலாத்காரத்திலாவது, தடையுத்தரவை மீறுவது என்றாவது முடிவு செய்திருந்தால் இன்றையத் திராவிடச் சரித்திரத்திலேயே ஒருபுதிய மாறுதல் ஏற்பட்டிருக்கும். மேல் நாடுகளில் யூதர்கள் விரட்டப்படுவது போல், இந்த நாட்டு ஆரியர்களும் விரட்டப் பட்டிருப்பார்கள். அந்தப் பரம்பரையின் அடிச்சுவடே தெரியாமல் ஒழித்து விடக்கூட முடியும். ஆனாலும், நாங்கள் சமாதானத்தையும், அமைதியையும் விரும்புவதால்தான் அநீதி மிக்க ஆளவந்தார்களின் செயல்களுக்குப் பொது மக்களையே தீர்ப்புக் கூறும்படி விட்டுவிட்டோம்.

ஆளும் வாய்ப்பு ஓரே இனத்தாரிடவாவது, அல்லது ஓரே ஜாதியாரிடமாவது, ஓரே கட்சியிடமாவது நிரந்தரமாக இருப்பதில்லை; இருக்கவும் முடியாது. இது அந்தந்தக் காலத்தில் மக்கள் அளிக்கும் தீர்ப்பைப் பொறுத்திருக்கிறது.

உதாரணமாகப் போர்க்காலத்தில், பிரிட்டிஷ் பிரதமராக இருந்த சர்ச்சில், போரின்போது பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குச் செய்ததொண்டுமகத்தானது தான்! ஆனாலும் அடுத்துவந்த தேர்தலில் பொதுமக்கள் அவருடைய கன்சர் வெட்டிவ்கட்சியைத் தோல்வியுறச் செய்ததால் அவர் பிரிட்டிஷ் பிரதமராக முடியாது போய் விட்டது. இது லண்டன் மக்களின் தீர்ப்பு!

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடிப்பிலிருந்து அயர்லாந்தை விடுவிக்க அரும்பாடுபட்டு, விடுதலை பெற்ற அயர்லாந்தைப் பதினாறு ஆண்டுகளாகப் பொதுமக்கள் அன்பையும், ஒத்துழைப்பையும் பெற்று ஆண்டு வந்தார் டிவேலரா.

ஆனால் இன்று அவர் ஆட்சிப் பீடத்தில் இல்லை. தற்பொழுது நடந்த தேர்தலில் அவர் கட்சி தோல்வியுற்றதால் அவர் பிரதமராக முடியாது போய் விட்டது. இது அயர்லாந்து மக்களின் தீர்ப்பு!

அடக்குமுறைச்சட்டத்தையும், கூலிப்படைகளையும் கொண்டு நாட்டை ஆள முடியும் என்று நினைத்தான் ரஷிய ஜார். தனக்கு மத குருமார்களின் துணையிருக்கும் வரை, தன்னை யாரும் அசைக்க முடியாது என்று கருதினான். ஜார் ஆட்சிப் பீடத்தில் அர்சனாக இருந்தானே தவிர, அவனை ஆட்டி வைத்தான் மத குரு ரஸ்புடீன். அவன் இட்டதுதான் நாட்டின் சட்டமாக விருந்தது. கொடுமை தாங்க முடியாது மக்கள் புரட்சி செய்தனர். ஜாரும், ரஸ்புடீனும் வீழ்ந்தனர். இது ரஷ்ய மக்களின் கடைசித் தீர்ப்பு.

திராவிட நாட்டை ஆளவந்த அமைச்சர்களும், ஆரியக்குருமார்களின் மனம் கோணாமல், அவர்களின் நல்வாழ்விற்கு அடிகோலும் வகையிலேயே சட்டத்தை ஏற்படுத்துகிறார்கள். ஆரியர்கள் அதாவது ரஸ்புடீன் பரம்பரைகள் சட்டம் எப்படியிருக்கவேண்டும் என்று சொல்கிறார்களோ அப்படித்தான் சட்டமும் ஏற்படுகிறது.

ஒரு வகுப்பாரின் சுயநலத்திற்காகவே, இந்த அரசாங்கம் நடத்தப்பட்டு வருகிறது என்பதை மக்கள் இன்று உணர்ந்துவிட்டார்கள். ஆரியப் புல்லுருவிக்கூட்டம் மக்களுக்குச் செய்துவரும் கொடுமைகளையும், அயோக்கியத்தனங்களையும் மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்குக்கூட இந்த நாட்டில் தடை விதிக்கப்படுகிறது. கொடுங்கோல் ஆட்சியைக் கண்டு மக்கள் உள்ளம் குமுறுகின்றனர் என்பதற்கு நாட்டில் பல இடங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளே தக்கசான்றுகளாகும். ஆளவந்த திமிர்பிடித்த அதிகாரவர்க்கத்திற்குப் பொது மக்கள் தீர்ப்புக் கூறும் நாள் வந்து கொண்டிருக்கிறது. நாட்டு மக்கள் நல்லதொரு தீர்ப்புக் கூறத்தான் போகிறார்கள். வரவிருக்கும் தேர்தலின் முடிவுதான் மக்களின் தீர்ப்பாக இருக்கப்போகிறது. “கண்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்” என்ற கவியின் வாக்குப்படி பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அநீதிக்கு மக்கள் அளிக்கும் தீர்ப்பு............?

## மண்டும் எதிர்ப்பில் மலையாத பண்பினர்க்கு,

ரோஜா முத்தையா

# இன்றைய மணமுறை!

"வாலறிவன்"

“ஏண்டி, பையன் ஜோராத்தான் இருக்கிறான், ஆனாக்கொஞ்சம்கருப்பு. பார்த்தா நல்லாத்தான் இருக்கிறான். கொஞ்சம் ஒல்லியா இருக்கிறான். அதுனாலேயே என்ன! நம்ப தனம் கையாலே சாப்ட்டான்னா உப்பிட மாட்டானா! பையன் ஒரே பிள்ளையாம். ஒன்பதாயிரம் ரூபாய் போகுமாம் அவங்க இருக்கிற வீடு. பி. ஏ. பாஸ் பண்ணி இருக்கிறான். அக்கௌண்டண்ட் ஜெனரல்ஸ் ஆபீசிலே, அப்பர் டிவிஷன் கிளார்க்கு. வயசு இப்பத்தான் இருபத்தி நாலு. ரிடயர் ஆவறத்துக்குள்ளே ஆபீஸராயிட மாட்டானா. நம்ம தனத்துக்குப் பேருக்கேத்தாப் போலையே புருஷனும் ஆப்டான். அவ அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்டி. என்ன சொல்றே? அடுத்த தை மாசம் முடிச்சிடலாம்” என்று பெண்ணின் தந்தை தன் மனைவியிடம்கூறுகிறார். தனலக்ஷிமியோ கட்டுத்திட்டமாகக் கண்ணாடிக் கன்னங்களோடும், கவர்ச்சிமிகு கண்களோடும் இருக்கிறாள்.

மண நாள் நிச்சயித்தாகி விட்டது.

மணநாளன்று இன்றைய அர்த்தமற்ற வழக்கம்போல், பந்தலுக்குள் குனிந்த தலையுடன் வருகிறாள் தனம். ஆவலால் குனிந்த நிலையிலிருந்து கொண்டே கண்களைத் திருப்புகிறாள் மணமகன்மீது. இரண்டாமுறையும் திருப்புகிறாள். மூன்றாம் முறை திருப்ப மனமெழவில்லை. கவலை குடிகொண்டு விட்டது. அப்பா உரைத்த அத்தனையும் பொய்யென்று தெரிந்து கொண்டாள். கட்டழகிக் கேற்ற கணவனல்ல அவன். வளைந்த முதுகும், ஒட்டிய கன்னங்களும், குறுகிய மார்பும், பார்ப்பதற்கு அருவருக்கத்தக்க முகத்தோடும் இருக்கிறான். ‘அவனுக்கு ஒன்பதாயிரமல்ல தொண்ணூறாயிரம் தான் இருந்தாலென்ன? அப்பர் டிவிஷன் கிளார்க்காயிருந்தாலென்ன, ஆபீசராகத்தான் இருந்தாலென்ன. கண்ணுக் கினியவனும் அல்ல. உடல் வலிமையுடையவனுமல்ல. எப்படி விரும்புவதவனை? எப்படி அவனோடு வாழ்க்கை முழுதும் காலங் கடத்துவது? என்று ஏக்கமுறுவதால் அவள் கண்களிலே நீர் பெருகுகிறது. வந்திருப்போர், ‘தன் பாட்டி இல்லையே என்றழுகிறாள்’ என்று பேசினர்.

மணமும் நிறைவேறுகிறது. வேறு விதி. ‘முடியாது’ என்று ஒரு பெண் சொன்னால் அதை யார் மதிக்கிறார்கள் இந்தக் காலத்தில்? இத்தகைய நிகழ்ச்சிகள் இந்த நாட்டில், ஏன், முதலாளித்துவமும் பெண்ணடிமையும் குடிகொண்டுள்ள எல்லா நாடுகளிலும் சர்வ சாதாரணம்!

* *

‘பெண்ணைப் பார்த்தாயாடா? எப்படி இருக்கிறாள்?’ என்று சுகுமாரனை அவன் நண்பர்கள் வினவ, ‘அய்யோடா! பார்த்தேண்டா, பார்த்தேன்! பூதம்போல இருக்கிறாள். பார்ப்பதற்கே சகிக்கவில்லை என்பானவன். ‘பார்ப்பதற்கே சகிக்கவில்லையே, பின்னே எப்படிடா அவளே கட்டிக்கப்போறே’ என்று அவன் தோழர்கள் கேட்பார்கள். ‘பூதமா இருந்தாலென்ன? பிசாசாகத்தான் இருந்தாலென்ன? அய்ம்பதாயிரம் ரூபாய் வரும் அவளைக் கட்டிக்கினா. ஒரே பெண்ணு. நகைகள், வேறே ஒரு அய்ந்தாயிரம் ரூபாய்க்குப் போகுமாம்; என்று சுகுமாரன் சொல்ல, ‘அப்பொழுதென்னமோ கட்டழகியைத்தான் கட்டிக் கொள்ளுவேன் என்று ‘சொன்னாயே’ என்றவன் நண்பன் கேட்பான். அவனும் கட்டுதிட்டமான உடலும், கவர்ச்சியுள்ள தோற்றமும் உடையவன்தான். அதனால்தான் அவ்வளவு தூரம் அவன் நண்பர்கள் கேட்கின்றனர்.

‘அடெ, அவளை கட்டிக்கினா அய்ம்பதாயிரம் ரூபாய் வருகிறது. பணம் கையிலே வந்ததும் அவளோடேயேவா இருக்கப் போகிறேன். பலரகம் பார்த்தாப் போச்சு என்பான் சுகுமாரன். இத்தகைய ஆடவர்தாம் சமூகம் அழுகிப் போவதற்குக் காரணம் என்று யான் சொல்லுவானேன்?

* *

‘ஏன்டி’ அவனெப் பார்த்தையே, எப்படி இருக்கிறான்? அறுபது வயசுதான்! இருந்தாக்கூட பதினெட்டு வயசு வாலிபன் அவன் கையிலே என்னா செய்ய முடியும்? என்ன சொல்றடீ, என்று கேட்பர் பெண் பெற்ற தந்தை தன்மனைவியை நோக்கி. அவளென்ன செய்வாள்; என்ன இருந்தாலும் கணவனுக்கு அடிமைதானே. பிடிக்கவில்லைதான் தன்னருமைப் பெண்ணைக் கிழவனுக்குக் கொடுக்க. சொன்னால் கேட்கப் போகிறாரா? ‘உம்’ சொல்லுங்கோ என்று வருத்தத்தோடு இருப்பாள்.

“அவனிடம் தட்ணா விழுந்து போற இந்தக் காலத்துப் பசங்களெல்லாம் என்ன செய்வாங்கடி! அவனுக்குப் பத்து வீடுகளாம். 1 வேலி நிலம் இருக்குதாம். சூளை கீளை வேறே இருக்குது. அவனுக்கு முதல் தாரம் பசங்க நாலுபேர் இருக்காங்க. நம்ப ராஜம் அவனைக் கைக்கீழ் போட்டுக் கறத்துக்கு வழிபண்ணிட்டா ஆய்ப் போச்சு எல்லாம். நம்பளதுதான் அவ்வளவும்” என்று மறுபடியும் மறுபடியும் கூறுவார் பணப் பேய்பிடித்த அறிவிலியாகிய அத்தந்தை. ஒட்டு நின்று கேட்டு விடுவாள் ராஜம். (அவன்மகள்) அவ்வளவுதான். துடிதுடிக்கும் அவள் மனம். வெம்பி, வெம்பி வெதும்புவாள். இரவெல்லாம் படுத்தபடி அழுதழுது தலையணையையும் படுக்கையையும் கண்ணீரால் குளிப்பாட்டுவாள். ஆண்மகனாகிய தந்தையின் அதிகாரந்தானே செல்லும். கலியாணம் நடந்துவிடும் மயிலினும் குயிலினும் இனிய காரிகைக்கும், உடல் தளர்ந்து நரைமுதிர்ந்த முதியோனுக்கும். தனக்குத் தந்தையாக இருக்கவேண்டியவனுக்குத் தாரமாகி விடுவாள். மகளாக இருக்கவேண்டியவள் மனைவியாகி விடுவாள்.

ஆண்டொன்று செல்லும். மாண்டொழிவான் கணவனாகிய அக்கிழவன். சமூகக் கட்டுத்திட்டங்களுக்குப் பயந்து தனது காமக்குதிரையைக் கட்டிப் பார்ப்பாள். எத்தனை நாட்களுக்கு! உணர்ச்சியை உலகக் கட்டுத்திட்டங்களால் அடக்க முடியுமா? பொங்கியெழும். அதனை அறிவாலும், விவேகத்தாலும், நீதியுரைகளாலும் தணிக்க முடியாது. அதுவும் இளங் கைம்பெண்ணால் இயலுமா? அவள் அக்காமத்தை அடக்கவேண்டிய அவசியம்கூட இல்லையே. கள்ளப் புருஷனோடு ஓடிவிடுவாள். ஊர் சிரிக்கும் அவளைக் கேலி செய்து. ஊர் சிரிக்கத் தெரிந்து கொண்டதே தவிரச் சீர்செய்யத் தெரிந்து கொண்டதோ?

* *

‘நன்றாக இருந்தாளே! ஏன் இழுத்து இழுத்து நடக்கிறாள். அவ்வளவு அழகும் எங்கேயோ போச்சே! பைத்தியம்போல பேசுகிறாள். ஏன்?’, என்பர் கட்டழகோடு கடிமணம் புரிந்து கொண்ட கண்ணம்மாளைப் பார்த்து ஊரார். அவர்கட்கென்ன தெரியும்? அது ஸிபிலிஸ் (Syphilis) என்னும் நோயின் வேலை என்பதும், அந்நோய் அவளுக்கு அவள் கணவனால் பரிசாக

**தொலைவும் தாரமும் துச்சமே யல்லவா?**

அளிக்கப்பட்டதென்பதும். ஸிபிலிஸ் முதலான கொடிய நோய்கள் தலைமுறை தலை முறையாக வரக்கூடியவை. எளிதில் ஒருவரிடமிருந்து மற்றவரையும் தொத்திக்கொள்ளும் தன்மையன. (Hereditary & Infectious) இன்றைய மருத்துவ முறைகளால் போக்கக்கூடியவைதாம். நோயெல்லாம் கடவுளின் சீற்றமென்று கருதும் மக்கள் நிறைந்த நாடு, எங்கே மருத்துவனிடம் போகப்போகிறது?

நிற்க, திருமணத்திற்கு முன் மணமகனும், மணமகளும் மருத்துவ சோதனையைச் செய்து கொண்டு, நோயிருப்பின் அதனைத் தீர்த்துக் கொண்டு தான்புணர்ந்து கொள்ளுதல் வேண்டுமென்பது இதனால் தெற்றெனத் தெரிகிறதன்றோ?

*    *

'அய்யோ! மணஞ் செய்துகொண்டு மகிழவே இல்லையே. ஒருவாரத்திற்கெல்லாம் இறந்து விட்டானே', என்ற கூக்குரல் நம் நாட்டில் மிகச் சாதாரணமாகக் கேட்கப்படும் குரல். ஏன்? வைத்த முகூர்த்தம் தப்பிப் போகிறதாம்! அதனால், சிறிது காய்ச்சலோடு இருந்தவனையும் குளிப்பாட்டி மணைமீது உட்கார வைத்துப், பொருளற்ற நீண்டவைதீக முறைப்படி மணஞ்செய்தனர். பிள்ளையின் காய்ச்சல், அலுப்பால் அதிகரித்தது. நியோமோனியா வந்து இறந்து விட்டான், விதவைக்கு மறுமணம் மறுக்கும் இம்மாநிலத்தில் அப்பெண்மணியைத்தனியே விட்டுவிட்டு. நல்லோரை, நன்னாள் முதலான நம்பிக்கைகளால் வரும் பல்வேறு கேடுகளில் ஒன்றல்லவா இது.

*    *

மேற்கூறியவை எல்லாம் திருமணங்களல்ல; வியாபாரம்! நடத்துவோர் பெற்றோர். முக்கியமாகத் தந்தையர். அவர் தம் மக்கள்தாம் வியாபாரப் பண்டங்கள். யார்விலை அதிகம் கொடுக்கின்றார்களோ, அவர்களுக்குப் போய்ச் சேருகின்றன அப்பண்டங்கள். இத்தகைய முறைகளிலே மணங்கள் நிகழும் இந்நாட்டில், விபசாரிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் ஏறுவதில் என்ன வியப்பு? அறிவிலிகள் அதிகமாவதில் என்ன ஆச்சரியம்? பேடிகள் மிகுதியாகப் பிறப்பதில் பிழைஎன்ன? நோய்கள் நாடுமுழுவதிலும் தாண்டவமாடுவதில் தவறுஎன்ன? கொலைகளும், தற்கொலைகளும் கொண்டாட்ட மிடுவதில் என்ன குற்றம்?

இவற்றை யெல்லாம் ஒழிப்பதற்குக் காதல் மணம் ஒன்றுதான் கருவி.

*    *

"சரியான 'கப்புள்' (Couple)என்று நினைத்தோமே! பிரியவே பிரியமாட்டார்கள் என்றல்லவா எண்ணினோம்! கல்லூரிக்கு வரும் போதும் போகும் போதும் ஒன்றாகவே இருந்த அவர்கள், இப்பொழுதெல்லாம் ஒன்றாகவே காணப்படுவதில்லையே. அவ்வளவு அழகை வைத்துக் கொண்டு சும்மாவா இருப்பான்? வேறு எவனையாவது பிடித்திருப்பாள்" என்று கல்லூரிமாணவர்கள் சின்னாள் காதலால் ஒன்றுபட்டொழுகிய எழில்மிகு தமிழ்மொழியாளையும், வனப்புடைத் தமிழரசனையும் பற்றிப்பேசிக் கொள்கின்றனர்.

கண்ணசைவால் கருத்திசையும் காதலர்கள் வாழ்க்கை, கால்நொடிப் பொழுதுதான் என்பதை அவர்களுணர்தல் வேண்டும்! அழகு காதலுக்கு வேண்டற்பாலதுதான். காதல் அதோடு நின்று விடுவதில்லை. மனப்பான்மை வேறுபடுமேல் காதல் முறிவுறும். தமிழ் மொழியாள் மக்களினத்திற்குத் தன்னலமற்ற தொண்டு புரியும் மனப்பான்மையினள். தமிழரசனோ தமிழ் மொழியாளைக் கடற்கரைக்கழைத்துக்கொண்டு போய், அவள் தன் பொன்னிறக் கன்னங்களில் தன் இன்னிதழ் பொருத்தி அளவிலா முத்தங்கள் கொடுக்கவேண்டும்; இயற்கையிலேயே அழகு மிகுந்த அவள் கழுத்தில் காஞ்சுகாமாலையைப் போட்டழகு பார்க்கவேண்டும்; பலரகப் புடவைகளை யணிவித்து அவளெழிலைப் பருகவேண்டும் என்றெல்லாம் விழைகிறானே தவிர, மக்கள் தொண்டைப் பற்றிச் சிறிதும் கருதுவதேயில்லை. மக்கள் தொண்டிற்கும் அவன்மனதிற்கும் மிகமிகத்தொலைவு. எப்படித் தமிழ் மொழியாள் அவனோடு ஒன்றிவாழ முடியும்? எனவே தான் அவனைக் காமுகன் என்று வெறுத்து விட்டாள். அவன் கவர்ச்சி மிகு இளங்காளையாகத் தானிருந்தாலென்ன?

மனமொன்றிய காதல் தான் காதல். அக்காதற்கட்டை எவராலும் அவிழ்க்க முடியாது; எக்கருவியாலும் அறுகக முடியாது. காதலர் உயிருள்ளளவும் அது இருக்கும்.

எனவே சமூகம் உரிமை தரவேண்டும், பெண்ணுக்கும், ஆணுக்கும் பார்த்துப்பேசிப் பழக. பெண்ணும், ஆணும் தங்கள் தங்கள் மனப்பான்மைகளை, குறிக்கோள்களைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். அதற்கோர் பத்து நாட்களாகிலும் பழகுதல் வேண்டும். பிறகே இசைதலோ தள்ளுதலோ வேண்டும். அத்தகைய காதற் கடிமணங்களால் தான் அறிஞர்களைப் பெற முடியும்; அறிவிலிகளைப் போக்க முடியம்; வீரர்களைப்பெற முடியும்; விஞ்ஞானிகளைப்பெற முடியும்; புலவர்களைப் பெற முடியும்; புன்மையரை நீக்க முடியும்; நாட்டை வளமாக்க முடியும்; மனித சமுதாயம் முன்னேறும்.

உயிர் வாழ்வதற்காகக் கணவனின் கையை எதிர்பார்க்கும் அடிமை நிலை பெண்ணுக்கு இருக்கும் வரை காதலைப்பற்றிப் பேசுவதெல்லாம் வீணுக்குக் கதை பேசுவது போலாகும். உணவுக்காக காலாலுதைத்தாலும் கணவனென்று அவனோடு இருக்கிறாள்; புன்மையனாகிலும் புருஷன் என்று பூசை செய்கிறாள்; மடையனாகிலும் மணாளன் என்று மதிக்கிறாள். இந்த நிலை மாறவேண்டும், உண்மைக் காதல் நன்மையுடன் திகழவேண்டுமெனின். பெண்ணும் வேலை செய்ய வேண்டும்; அதற்கேற்றஊதியம் அவள் பெறவேண்டும். அப்பொழுதுதான்ஒரு பெண் ஒருவனை நேசித்தால், அது பணத்திற்காகவன்று; உணவிற்காகவன்று; உண்மைக்காதலினால் என்ற நிலையை அடையும். அத்தகைய உரிமைக்குப் புரட்சி செய்வோம்! அப்புரட்சிதான் பொதுவுடைமைப் புதுச் சமுதாயத்தைச் சமைத்தெடுக்கும் புரட்சி!

வாழ்க! பெரியார்.
வாழ்க! லெனின். வாழ்க! டிராட்ஸ்கி.


# நாதன் கம்பெனி லிமிடெட்.

✯

## புத்தக விலைப் பட்டியல்.

குடிஅரசு பதிப்பக வெளியீடுகள்.

| | | | |
|---|---|---|---|
| ராவணப் பெரியார் | 0 | 8 | 0 |
| புது ரஷ்யா | 0 | 8 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| இரணியன் அல்லது இணையற்ற வீரன் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| சமதர்ம கீதம் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-
கச்சேரி வீதி, ஈரோடு.
94 C. பிராட்வே,
சென்னை.

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கம் காட்டாமல், சனங்களுக்குள் பிரிவுகளும் பலவீனமும் உண்டாக்குவதில் தான் தங்கள் சமயமும், லாபமுமிருப்பதைக் கண்டு கொண்டார்கள். அந்தப் பழக்கத்தாலும், சம்பிரதாயத்தாலும், மூட பக்தியாலும் நமது பூமியில் பல நூற்றாண்டுகளாக வெறுப்புகளும், அவற்றினும் கொடியதான உணர்ச்சியற்ற தன்மையும் நிறைந்து விட்டன. ஒரு எட்டுக்குப்பின் ஒரு எடு; இரண்டு எட்டுக்கும் மற்றொரு எடு. இப்படியே பிரமாணம் காட்டிப் பாதையினின்றும் விலகி, வார்த்தைகளாகிய காய்ந்த எலும்புகளைக் கடிப்பதிலேயே பண்டிதர்கள் காலம் போயிற்று. கல்விப் பழக்கம் தவறான முறையில் சென்றது.

வாலிபர்களே! பண்டிதர்களைக் குற்றம் சொல்லுகிறேன் என்று நினைக்காதீர்கள். அவர்கள் செய்ததைநினைக்கையில் குற்றம் சொல்லவேண்டியிருக்கிறது. எண்பது வருடத்திற்குமுன் புலவர்களைக் குற்றம் சாட்டி ஒரு புலவர் ஒரு எடு எழுதி அச்சுப்போட்டார். அந்த எடுமென்னிடமில்லை, படித்தது மறந்து விட்டது. அதில் சில குறிப்பை மட்டும் சொல்லுகிறேன்.

"மாண்டு போனவர்களைத் தீர்க்கமாய்த் தெய்வமென்று தீட்டினீர் புராண நூல்கள்! பார்ப்பார் பூசுரர்கள் மோட்சம் பாலிப்பாரெனச் சாதித்தீர்! சாதித்தீரிந்த இரண்டு, சமயத்தைப் பெருக்கி, மாந்தரைப் பேதிக்கும் மனதுண்டாக்கிப் பெரும் பள்ளக்குழியில் வீழ்த்தினீர்! சோதித்துப்பொருள்நாட்டாமல் சொல்லினீர்! பார்ப்பார்க்காகப் போதித்து மூடராக்கிப் பொய்தனைப் புகட்டிநின்றீர்! பஞ்ச லட்சணங்கள் ஓர்ந்தும், பாரகாவியங்களாய்ந்தும், கொஞ்சுங் கிள்ளையைப் போற் கற்றுங் கூறினீர் கதைபாட்டாக! வஞ்சகர் தங்கள் மாயை வசத்தராய் நின்றெல்லோரை பஞ்சைகளாக்கி விட்டீர் படித்த உங்களைக் கேட்டதால்! தொனி மணிஓசை கேட்டுத் துயருழந்திறக்கு மான்போல், மனிதருமுங்கள் பாவின் மலரிசை கேட்டு மாய்ந்தார்!" இது எண்பது வருடத்திற்குமுன் நம் புலவர்களைப் பற்றி ஒரு புலவர் பாடியது. இதைப் பாடின புலவன் கண்ட உண்மைக் கருத்துக்களைப் பார்த்தீர்களா? உங்களையும் உங்கள் பெரியாரையும் ஒருதட்டில் போட்டு, இந்தப் புலவனையும்ஒருதட்டில்போட்டுஎடை போட்டால், எடை பார்த்துச் சொல்ல உங்களாலும் உங்கள் பெரியாராலும் முடியாது.

"சமயப் படிப்பில்லாவிட்டால் உலகம் கெட்டுப் போகும். பள்ளியில் சமயப் படிப்பில்லாவிட்டால் மாணாக்கர்களுக்கு ஒழுக்கமும் நன்னடத்தையும் எப்படி வரும்? அவரவர்கள் சமயத்தை அவரவர்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?" என்று பார்ப்பார்களும் பண்டிதர்களும் சொல்லுவார்கள். கிருஷ்ண பரமாத்மாபதினாயிரத்தெட்டுப் பெண்களோடு சலக் கிரீடை செய்தாரே, நாம் இப்பொழுது அவர் ஸ்தானத்தில்தானே இருக்கிறோம், பத்துப் பெண்களுடனாவது நாமேன் சலக் கிரீடை செய்யக் கூடாது என்று மகந்து எண்ணலாம்! அப்படியும் சில மகந்துக்கள் செய்தார்கள். சிவபெருமான் ரிஷி பத்தினிகளைக் கற்பழித்தாரே, இப்பொழுது நாம் சிவபெருமானின் இடத்தில்தானே யிருக்கிறோம். இப்பொழுது ரிஷி பத்தினிகளில்லாவிட்டாலும், அதற்குக் கீழ்ப்பட்ட பெண்கள்கூட இருக்கக் கூடாதா என்று மடாதிபதிகள் நினைக்கலாம்! அப்படியும் பல மடாதிபதிகளிருந்திருக்கிறார்கள். இவர்களுக்குச் சமய சாஸ்திரம் தெரியாதா? படிக்கவில்லையா? பணக்காரர்கள் தங்கள் பணங்களைத் தேவைக்கு மீறிய சுகபோக ஆடம்பரங்களுக்குச் செலவு செய்கிறார்கள். தங்கள் அக்கம் பக்கத்து ஏழைகளுக்கு, தங்கள் வேலைக்காரர்களுக்கு கூடத் தேவைக்குச் சிறு சாதனங்களையும் வாங்கிக் கொடுக்காதவர்கள் எத்தனைபேர்? நோய் வாய்ப்பட்டவர்களைக் கவனிக்கச் சமயம் கட்டாயப்படுத்துகிறது. தங்கள் வீட்டுப் பெண்கள் ருது தவறினால் பத்து மாதமும் பார்த்துக் கொள்ள பெண் டாக்டர்! ஆலோசனைக்கு டாக்டர்! பிரசவத்திற்குத் தனி டாக்டர்! என்று அலைந்து தேடிப் பிரயாசைப்படுகிறார்கள். வேலைக்காரன் பெண்ஜாதி கெர்ப்பமாயிருந்து நோய் உண்டாகி, அதனால் வேலைக்காரன் பொறுத்துப் பண்ணைக்கு வந்தால் ஏண்டா! வேலைக்குவர இவ்வளவு நேரம் என்று எஜமானன் கேட்க, என்பெண்ஜாதி கெர்ப்பம், அவளுக்கு உடம்பு சவுக்கியமில்லை, துணைக்கு ஆள் தேடி வைத்துவிட்டு வர நேரமாய் விட்டதுங்கோ என்றால், நீதான் பிள்ளை பெறுகிறாயோ? உலகத்திலில்லாத மாதிரி உன்பெண்சாதி பிள்ளை உண்டாய்விட்டாளோ? என்று கேட்கிற எஜமான்மார்கள் எத்தனை பேர்? ஏழைகள் பிரசவத்திற்கு ஒருபடி விளக்கெண்ணெய்கூட வாங்கிக் கொடுக்காதவர்கள் எத்தனைபேர்? ஒரு சேலைக்கு, மறுசேலையில்லையே என்பதைத் தெரிந்தும்கூட, கிழிந்து இத்துப்போன பழையதைக்கூடக் கொடுக்க மனம்வராத நாகரீக மணிகள் யெத்தனையோ பேர்கள்! உழுது பயிர் செய்யும் ஏழைக் குடியானவர்களுக்கு, அஞ்சு பத்து கந்தாயத்தில் விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று புல்லைக்கூட எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள் மிராஸ்தாரர்கள். பூச்சும் பூசையும் விருத்தியானாலும், வட்டிக்கு வட்டி வதைத்து வாங்குவதை விட்டார்களா? கள்ள மார்க்கட்டும் கைக்கூலியும் கரைபுரண்டு ஓடுகிறதே! இவர்களெல்லாம் சமயம் தெரியாதவர்களென்றோ, படிக்காதவர்களென்றோ சொல்ல முடியுமா? இவர்கள் காலத்தில் பள்ளியில் சமயப்படிப்பு இருந்ததே! சமணர்களைச் சைவர்கள் கொன்றார்கள். பௌத்தர்களை ஸ்மார்த்தர்களும், வைணவர்களும் சேர்ந்து கொன்றார்கள். இவர்களுக்குச் சமயப்படிப்பில்லையா? இராமானுசாச்சாரியாரைப் பாஷாணம் வைத்தும், கெங்கையில் தள்ளியும் கொல்ல ஸ்மார்த்தர்கள் பார்த்தார்கள். ஆச்சாரியார் தப்பித்துக்கொண்டார். சமயக்கடலான நாலு வேதம் படித்தவர்களல்லவா ஸ்மார்த்தர்கள். இப்பொழுது சட்டசபையைப் பாருங்கள். நம்முடைய எல்லாக் காரியங்களின் பொறுப்புகளெல்லாம் அவர்களிடமல்லவா இருக்கிறது? அவர்கள் சபையின் பொறுப்பு, அந்தஸ்து, தன்மைகளையுணராமல், நகைக்கும் மாதிரியான ஆபாசத்தைச் செய்கிறார்கள். அதைத் தடுக்கச் சபைத் தலைவர் தினம் ஒரு உத்தரவு போட்டுப் பாடமும் சொல்ல வேண்டியிருக்கிறதே! இந்த மெம்பர்களெல்லாம் சமயம் படிக்காதவர்கள், தெரியாதவர்களென்று சொல்ல முடியுமா? சாதாரணமாகக் கண்டும் கேட்டும் தெரிந்துகொள்ள வேண்டிய மரியாதை ஒழுக்கம் நடக்கை இவைகளைக்கூடச் சமயம் கற்றுக்கொடுக்கவில்லை என்றால், பின் எதைத் தான் சமயம் கற்றுக்கொடுக்கும்? அண்ணா அண்ணாத்துரை சொன்னதுபோல், எமதருமனுக்கு வாகனம் எருமைக்கடா என்பதைச் சமயத்தில் கற்றுக் கொண்டால் போதுமா? எல்லாத் தானதருமங்களையும் பிராமணனுக்குக் கொடுத்தால், எல்லாச் சம்பத்தும் வந்து விடுமென்று கற்றுக்கொண்டது போதுமா?

திருவண்ணாமலை ரமணீக ரிஷி, தன்னைக் காப்பாற்றிய பரதேசிகளை எல்லாம் ஏமாற்றி, தானே எல்லாச் சொத்தையும் சம்பாதித்தேன் என்று சொல்லி, மடமுதலான எல்லாச் சொத்தையும் தம்பிக்குஎழுதிவைத்து, ரிஷியாகத்தானே விளங்குகிறார். இப்பொழுது பகவான் என்கிற மேல்படிக்கு உயர்த்தியிருக்கிறார்கள். இவர் சமயம் படிக்கவில்லையா? இவரின் சிஷியர்கள் தான் சமயம் படிக்கவில்லையா? சமயம், ஏமாற்றியும் மோசடியும் செய்து, வயிறுவளர்க்கத் தானே கற்றுக்கொடுக்கிறது. வேறு எதைக் கற்றுக்கொடுக்கிறது? சொல்லட்டும்!

திராவிட வாலிபர்களே! நம்மைப் பின்னால் தள்ளிப் பழைய நிலையிலேயே வைக்கப்பார்க்கிறார்கள். நம்மவர்கள் தங்கள் வாழ்க்கையை நினைக்

கிறார்களே யல்லாமல், சமூகத்தை நினைப்பதில்லை. நீங்கள் படிப்பதை விட நான் எழுதுவது கஷ்டம். கிழவயதால் கைநரம்புகள் வலிக்கின்றன. இருந்தாலும், அக்கிரமத்திற்கும், அனியாயத்திற்கும் எனக்குத் தெரிந்த நியாயம், தெளிவான யோசனையும் நேர் நடையுமுடையவர்களிடமாவது செல்லட்டுமென்று எழுதுகிறேன்.

பல சங்கடமான விவகாரங்கள் உலகத்தின் முன்னே நிற்கிறது. நாமும் உலகத்திலிருக்கிறோம், அது நம்மையும் சூழ்ந்திருக்கிறது. அதற்குத் தீர்ப்புக் கண்டுபிடிப்பது ராஜாங்கமும், ஜனங்களெனப்பட்ட அதன் சபையுமாகும். ஆளுக்கும் அரசுக்கும் போராட்டம்! தொழிலாளிக்கும் முதலாளிக்கும்சண்டை! ஆணுக்கும் பெண்ணுக்கும் யுத்தம்! லௌகிக லாபத்திற்கும், ஆத்ம லாபத்திற்கும் யுத்தம்! சதிகளின் கூட்டு அகங்காரத்திற்கும் மனுஷிய பரம அய்க்கியத்திற்கும் போர்! அப்படியே வர்த்தகம், தொழில் அரசு எனுமிவற்றின் பிரமாண்டமான கூட்டங்களிலே, சகஜமாக விளையக் கூடிய குரூரமான சிக்கல்களுக்கும், அழகையும் பரிபூரண சாந்தியையும் விரும்புகிற மனிதருக்கும் யுத்தம்! இத்தனை குழப்பங்களுக்குச் சமாதானம் கண்டுபிடிக்க வேண்டும். அதை விட்டு நமது சட்டசபையோ அதைவிடப் பிர்மாண்டமான விவகாரங்களைத் தீர்த்துக்கொண்டிருக்கிறது. சிகரெட்டுக்கும் பொடிக்கும் சண்டை! பேப்பருக்கும் புஸ்தகத்திற்கும் யுத்தம்! ஆரஞ்சிப் பழத்திற்கும் சாப்பிடுவதற்கும் யுத்தம்! தூக்கத்திற்கும் குறட்டைக்கும் போர்! கண்ணைமூடித் தூங்காமலிருப்பதற்கும் கண்ணை விழித்துக்கொண்டுதூங்குவதற்கும் யுத்தம்! மந்திரிகள் பேசுகையில் மெம்பர்களிருக்கலாமா? மெம்பர்கள் பேசுகையில் மந்திரிகளிருக்க வேண்டுமா? என்கிற சண்டைகளுக்கெல்லாம், சரியான தீர்ப்புக் கண்டு பிடித்துச் சொல்ல வேண்டிய வேலை, சபாநாயகருக்கு. இவைகளை யெல்லாம் சரியாகத் தெரிந்துவர மூன்று பேரை அய்ரோப்பாவிற்கு அனுப்பலாமா? கூடாதா? என்பது பெரிய இடத்து உத்தரவைப் பொறுத்தது. இவர்களிடம்தான் நமது வாழ்க்கைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. பெரிய இடத்துச் சங்கதி இவ்வளவோடு நிற்கட்டும்!

தயை, இரக்கம், தருமம் சமயப் படிப்பால் வரவில்லை என்று சொன்னேன். வந்ததையும் சொல்லுகிறேன். சனசமூகத்தின் ஒரு பகுதியை மிதித்துக், கசக்கி, வறியோராக்கி, இழிவடையச் செய்து சேமித்து வைத்த தனத்தில் கருமாந்திரத்திற்கும், கலியாணத்திற்கும் பெயருக்காகச் சிறிது சாப்பாடு போடுவது தருமம். இந்தத் தருமம் சாஸ்திரப்படி பிராமணர்கள் செய்யமாட்டார்கள். அவர்கள் உபதேசப்படி பல பணக்காரர்களும் செய்யமாட்டார்கள். (தீண்டப்படாத ஜாதிக்கு) பட்டினியால் வாடி உலரும் ஏழைகளைப்பற்றிக் கவலையில்லை. பணக்காரர்களைத் தருமம் நேரே எப்படிச் சுவர்க்கத்திற்கு அனுப்புகிறதென்றால், அழுகிப் போய் உதவாமற் போய் விட்ட மதத்தின் சிறந்த பிரதிநிதிகளான, தின்று கொழுத்திருக்கும், "பேராசைக்காரனடா பார்ப்பான், பிடிங்கித்திங்கவே பார்ப்பான்" என்று பாரதி சொன்னபடி அவர்களுக்கும், விபசார விடுதி கோவில் என்று மகாத்மா காந்தி சொன்னபடி, கடவுளின் அன்னசாலைகளிலே வசிப்பவருக்கும், அன்னதானம் தருமம். அதைச் செய்கிறவர்களைச் சொர்க்கத்திற்கனுப்பும். சமயப்படிப்பு, இந்தத் தரும ஒழுக்கத்தைத்தான் கற்றுக்கொடுத்தது. நமது பிள்ளைகளும் அதையே படித்து, அந்தச் சமய ஒழுக்கத்திலேயே இருக்கச் சமயப்படிப்பென்கிறார்கள். பிராமணர்களுக்குச் சமயம் வேதத்திலிருக்கிறதாம்! நமக்கு இராமாயணத்திலிருக்கிறதாம்!

பிராமணப் பிர்மச்சாரி வேஷத்துடன் நின்ற அனுமான், லட்சுமணரால் இராமர் வரலாற்றைக் கேட்டு இராமர் காலடியில் தாழ்ந்தான். அதைப் பார்த்து "தாழ்தலுந் தகாத செய்ததென்னை நீ தருமமன்றால்! கேள்வி நூல் மறைவலாளா" வென்றனன் இராமன். நீவேத நூலையுடைய பிராமணனாயிருந்து சிறுவனாயிருந்தாலும், பெரியவனாய என்னை வணங்கினது தருமமல்ல! தகாத செய்கை என்றார் இராமர்! நான் பிராமணனல்ல, அரிக்குலத் தொருவன் என்றான் அனுமான். பிராமணர்கள் சிறுவர்களாக விருந்தாலும், மற்ற பெரியவர்கள் வணங்கவேண்டும். மற்ற பெரியவர்களைச் சிறிய பிராமணன் கூட வணங்கக் கூடாது. வணங்கினால் அது தகாத செய்கை. தருமமுமல்லவென்று ஆதிமூலப்பொருளான இராமரேசொல்லுகிறார்; நடந்தும் காட்டுகிறார் என்று இராமாயணம் சொல்லுகிறது. இந்த இராமாயணச் சமய நூலைத்தான் படிக்கச் சொல்லுகிறார்கள். இனியும் பார்ப்பான் காலுக்குள் நம் தலை ஒடிக்கொண்டிருக்க நமது பெரிய பண்டிதர்கள் ஆராய்ச்சியும், கவியின்பமும் கண்டு நமக்குச் சொல்லிக்கொண்டுமிருக்கிறார்கள். நமது கல்வி மந்திரிதான் நம்மை விட்டாரா? இராமாயணம் நமக்கு முன்னோர் கொடுத்த பொக்கிஷ மென்கிறார். பண்டைய மதசம்பிரதாயங்களுக்கு விரோதம் சொன்னால் தண்டிப்பேன் என்கிறார். இவரோ சூத்திரன்.

"சூத்ரஸ்யது ஜுகுப்ஸிதம்" என்கிற மனுதர்ம விதி பண்டையச் சம்பிரதாயம். அதாவது காதில் விழும்போதே அருவருப்பை உண்டு பண்ணும் பெயர்தான் சூத்திரனுக்கு இட வேண்டும். இவர்பெயரோ அவினாசி லிங்கம். கொங்கு நாட்டிலுள்ள ஏழு சிவஸ்தலங்களில், அவினாசி லிங்கமென்பது ஒன்று. பெயரைக் கேட்டாலே முக்தியும் பக்தியும் வந்து விட்டதாகவல்லவா சைவ சமயம் சொல்லுகிறது. இந்தப் பெயரைச் சூத்திரனுக்கு வைக்கலாமோ? பண்டைய மதசம்பிரதாயங்களுக்கு விரோதம் கூடாது என்கிற இவர் மட்டும் இப்படி வைத்துக் கொண்டிருக்கலாமோ? உத்தரவுக்கு இவரே எஜமானன் ஆனதால், இவரை இவரே தண்டித்துக் கொள்ளட்டும்!

★

## கடவுளுடன் போட்டியா?

கடவுள் மீதும் கடவுள் செயலிலும் நம்பிக்கை யுள்ளவர்கள் என் க்ஷவரம் செய்து கொள்ளுகிறார்கள்? என்பது நமக்குத் தெரியவில்லை. கடவுளாகக் கொடுத்ததைப் பரிகாரியைக் கொண்டு என் சிரைக்கவேண்டும்? இது கடவுளுடன் போடும் போட்டியல்லவா? தொலைந்து போகட்டும் என்றாலோ அந்தக் கடவுளாவது, "அவனுக்கு அது இஷ்டமில்லை" என்று கருதி நிறுத்தி விடலாம். ஏன் மறுபடியும் வளரச் செய்கிறார் என்பதும் நமக்குப் புரியவில்லை.

ஒருசந்தேகி.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE

குடி அரசுப் பதிப்பக
வெளியீடுகள் பல
அழகிய முறையில்
அச்சாகி வருகின்றன

தூத்துக்குடி மாநாட்டில்
நமது புக் ஸ்டாலில் கிடைக்கும்.
நாதன் கம்பெனி, ஈரோடு.